KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL



மலர்:- 32, 28 பெப்ரவரி 2025 இதழ்:- 09


# ஈழநாடு


பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

CashPoint
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600


BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


## காணாமலாக்கப்பட்டோரது உறவினர்களின் போராட்டம் சர்வதேச கவனத்தை பெற்றுள்ளது- ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக் காட்டு!




இலங்கையில் குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச தளங்களில் பங்கேற்று அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் என்பவற்றின் ஊடாக (4ம்பக்கம் பார்க்க)


GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham M.A.Sc. (Eng.) P.Eng
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters


ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்


BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED


## அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்கு "கோல்ட் கார்ட்" விலை 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள்! - ட்ரம்ப்

# இலங்கையில் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகின்றதா? ஜனாதிபதி அநுர தனது பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும்!

அண்மையில, புதுக்கடை நீதிமன்றத்தில் இடம்பெற்ற படுகொலையைத் தொடர்ந்து ஒருவகையான பாதுகாப்பு கரிசனை எழுந்துள்ளது. பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதலின் விளைவாகவே குறித்த படுகொலை இடம் பெற்றிருந்தது. ஆனால் குறித்த கொலை நீதிமன்றத்துக்குள் இடம் பெற்றிருப்பதைக் கொண்டே பாதுகாப்பு கரிசனை எழுந்துள்ளது.(3ம் பக்கம்)





## முன்னணியின் அழைப்பை நிராகரித்த தமிழரசுக்கட்சி!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்புக்கு தமிழரசுக் கட்சி பதில் கூறியிருக்கிறது. அதன்படி ஒரு புதிய யாப்பை நோக்கித் தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கும் நோக்கத்தோடு முன்னணியால்(9ம்பக்கம் பார்க்க)

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் - சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு.திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார். கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு 416 841 9600

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representative*



PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




22 Years Real Estate Experience


885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
**Bus: 416-289-3333**


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Warden/Finch


**Scarborough** $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


## Kennedy / Hwy 401

**Scarborough** $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit

## Markham / Sheppard Ave

**Scarborough** $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

## McCowan / Ellesmere

**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


## Mccowan & Hwy 401

**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


## Kennedy / 401

**Scarborough** $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

## Simcoe St / 401

**Oshawa** $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft

## Grandview Dr. / Bloor


**Oshawa** $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

## 9TH LINE / HIGHWAY 7

**Markham** $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

## Dixie/ Glenanna

**Pickering** $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

## Audley Rd & Rossland Rd E

**Ajax** $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse


## Markham & Ellesmere

**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

## Morningside/Mcnicol

**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

## 401/Morningside

**Scarborough** $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

## 10th Line/ Hoover Park Dr

**Stouffville** $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

## 9th Line/Hoover Park

**Stouffville** $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கையில் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகின்றதா? ஜனாதிபதி அநுர தனது பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும்!



அண்மையில, புதுக்கடை நீதிமன்றத்தில் இடம்பெற்ற படுகொலையைத் தொடர்ந்து ஒருவகையான பாதுகாப்பு கரிசனை எழுந்துள்ளது. பாதாள உலகக் குழுக்களுக் கிடையிலான மோதலின் விளைவாகவே குறித்த படுகொலை இடம் பெற்றிருந்தது. ஆனால், குறித்த கொலை நீதிமன்றத்துக்குள் இடம் பெற்றிருப்பதைக் கொண்டே பாதுகாப்பு கரிசனை எழுந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, மேலும் சில துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் கொலைகளும் இடம் பெற்றுள்ளன. பாதாள உலகக் குழுக்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதும் ஒருவரை ஒருவர் இலக்கு வைத்து பழி தீர்ப்பதும் இலங்கையில் அவ்வப்போது இடம்பெறும் விடயம் தான். ஆனால் அச்சமற்ற சூழலொன்றை ஏற்படுத்தப் போவ தாகக் கூறி வரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் காலத்தில் இவ்வாறான கொலைகள் இடம் பெறுவதால் இதனை ஒரு பிரதான பேசுபொருளாக எதிரணியினர் முன் வைத்து வருகின்றனர்.

ஒருவகையில் இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்து க்கு சவாலாகவே மாறியிருக்கின்றது. ஏனெனில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தனது பாதுகாப்பு தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்தவில்லை. அத் துடன், ஜனாதிபதிக்கான பாதுகாப்பை குறைத்திருப்ப தையும் ஒரு முன்னுதாரணமான விடயமாகவே அவர் முன் வைத்திருந்தார்.

ஜனாதிபதியே தனது வாகனத்தின் கதவைத் திறந்து இறங்கி வரும் காட்சிகள் மக்கள் மத்தியிலும் வரவேற் பைப் பெற்றிருந்தன. ஆனால், இலங்கை போன்ற நாடு களில் பாதுகாப்பு விடயங்களில் கரிசனையற்றிருப்பது உசிதமான விடயமா என்னும் கேள்வியையே மேற்படி சம்பவங்கள் எழுப்பியிருக்கின்றன.

இலங்கை நீண்டகாலமாக உள்நாட்டு யுத்தத்துக்குள் சிக்கியிருந்த ஒரு நாடு. அந்த வகையில் இலங்கையின் அரசியலில் துப்பாக்கிக் கலாசாரம் புரையோடிப் போயி ருந்தது. அரசியலில் தங்களின் எதிரிகளை அகற்றுவதற்கு துப்பாக்கிகளை பயன்படுத்தும் கலாசாரமானது நீண்ட காலமாக ஓர் அச்சுறுத்தும் காரணியாக இருந்திருக் கின்றது. ஆனால், யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து அவ்வாறான நிலைமை படிப்படியாக குறைவடைந்தது. இப்போது அரசியல்வாதிகள் அச்சப்படுமளவுக்கான நிலைமை இல்லை.

எனினும், அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் தென்னிலங்கையில் பாதாள உலகக் குழுக்கள் பலமான நிலையில் இருக்கின்றன என்பதையே காண்பிக்கின்றன.

அவர்களைப் பயன்படுத்தி பல விடயங்களை மேற் கொள்ளக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. நீதிமன்ற வளாகத்துக்குள் இடம்பெற்ற படுகொலை அதற்கான எடுத்துக் காட்டாக இருக்கின்றது. இதற்கு முன்னரும் நீதிபதியையே பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் சுட்டுக் கொலை செய்த சம்பவமும் இருக்கின்றதுதான். ஆனால், இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய பிறிதொரு விடயம் உண்டு. அதாவது, நல்லாட்சி அரசாங்கமாகக் காண்பிக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில்தான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. அதுவே பின்னர் ரணில் — மைத்திரி ஆட்சியை மாற்றுவதற்கான பிரதான காரணியாக மாறியது.

நாட்டில் பாதுகாப்பு பலவீனமாக இருக்கிறது என்னும் காரணத்தைக் காண்பித்தே கோட்டாபய அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தார். கோட்டாபயவால் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாது என்னும் நிலையில்தான் மீண்டுமோர் ஆட்சி மாற்றத்துக்கான காரணம் உருவாகியது. இந்த நிலையில் அநுர அரசாங்கத்தில் இது போன்ற விடயங்கள் தொடருமாக இருந்தால், நாட்டில் மீண்டும் பாதுகாப்பற்ற சூ ழலொன்று ஏற்பட்டு விட்டதான அரசியல் தோற்றப்பாடே உருவாகும். அது இறுதியில் அரசாங்கத்தின் வீழ்ச்சியாகவும் மாறலாம்.

# அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்கு “கோல்ட் கார்ட்” விலை 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள்! - ட்ரம்ப்



அமெரிக்காவில் குடியேறுபவர்களுக் காக ‘கோல்டு கார்ட்’ என்ற திட்ட த்தை அறிமுகப்படுத்த இருப்பதாக வும் 5 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுத்து அதனை பெற்றுக் கொள் ளலாம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ட்ரம்ப் பதவியேற்ற பிறகு அமெரிக்கா வில் சட்டவிரோதமாக குடியேறியவர் கள் அவரவர் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என அறிவித்தார். அதன்படி அங்கு சட்ட விரோதமாக குடியேறியவர்களை நாடு கடத்தும் நடவடிக்கையை அமெ ரிக்க அரசு மேற் கொண்டுள்ளது. மெக்சிகோ கொலம்பியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு பல கட்டங் களாக சட்டவிரோதமாக குடியேறிய வர்கள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். இந்த சூழலில் அமெரிக்காவில் குடியேறிய வர்களுக்காக ‘கோல்டு கார்ட்’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்த இருப்ப தாகவும் 5 மில்லியன் டாலர்களை கொடுத்து அதனை பெற்றுக் கொள் ளலாம் என்றும் ட்ரம்ப் தெரிவித்து ள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: நாங்கள் தங்க அட்டை ஒன்றை விற்பனை செய்ய இருக்கிறோம். க்ரீன் கார்டு போல இது கோல்டு கார்டு. இந்த அட்டைக்கு நாங்கள் 5 மில்லி யன் டாலர்கள் என விலை நிர்ணயம் செய்துள்ளோம். இதில் க்ரீன் கார்டில் இருக்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்கும்.

இது குடியுரிமைக்கான ஒரு வழி யாகும். பணக்காரர்கள் எங்கள் நாட்டுக்கு இந்த கார்டை பெற்று வரலாம். அவர்கள் இங்கே வசதி யுடனும் வெற்றிகரமாகவும் இருப்பார் கள். அவர்கள் நிறைய பணம் செலவு செய்வார்கள்(22ம் பக்கம் பார்க்க)


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# காணாமலாக்கப்பட்டோரது உறவினர்களின் போராட்டம் சர்வதேச கவனத்தை பெற்றுள்ளது- ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக் காட்டு!



இலங்கையில் குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச தளங்களில் பங்கேற்று அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் என்பவற்றின் ஊடாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட அவர்களது கோரிக்கை சர்வதேச அவதானம் பெற்றிருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் 24 பெப் 2025 திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் நிலையில், திங்கட்கிழமை தொடக்க அமர்வில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், இலங்கை தொடர்பில் எதனையும் பிரஸ்தாபிக்கவில்லை.

இந்நிலையில் உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் மற்றும் நிலைமாறுகால நீதி நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் இலங்கை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச தளங்களில் பங்கேற்று அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் என்பவற்றின் ஊடாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட அவர்களது கோரிக்கை சர்வதேச அவதானம் பெற்றிருப்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு இம்முயற்சிகள் சிவில் சமூக அமைப்புக்கள் ஊடாக மேலும் வலுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், குறிப்பாக பாதிக்கப்பட்ட தரப்பினருடனான பரந்து பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் கடந்த 2016 ஆம் ஆண்டு நல்லிணக்கப்பொறிமுறை தொடர்பான ஆலோசனை செயலணியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மீது கவனம் பாய்ச்சுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தகைய இருவழி அணுகுமுறையானது கடந்தகால ஆயுத மோதல் மற்றும் வன்முறைகளின் தாக்கங்களை உரியவாறு கையாள்வதற்கு ஏற்றவாறு எதிர்கால வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கான அடித்தளத்தை இட்டிருப்பதாகவும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக்கட்சி தனித்தே போட்டியிடும்!

உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழரசு கட்சி தனித்துப் போட்டியிடும் என தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். வடமராட்சி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் அவர் கூறியுள்ளதாவது, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் ஏற்கனவே எடுத்துக கொண்ட தீர்மானத்திற்கமைவாக தனித்துப் போட்டியிடுவோம். சபைகளில் ஆட்சி அமைக்கும் போது கூட்டாக ஆட்சி அமைக்க முடியும். இது தொடர்பாக எமது கட்சித் தலைவர் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை (ரெலோ) கலந்துரையாடலுக்கு வருமாறு தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அழைப்பு விடுத்துள்ளார்.




வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%


- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தீர்மானம்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 9 கட்சிகள் இணைந்து போட்டியிடுவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் இடம்பெற்ற கட்சி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கூட்டணியில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயக தமிழரசு கட்சி, சமத்துவ கட்சி ஆகிய 9 கட்சிகளும் கலந்து கொண்டிருந்தன.

அதன்படி தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

மேலும் இன்றைய கலந்துரையாடலில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த்



தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. ரவீந்திரா (வேந்தன்), தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ், ஜனநாயக தமிழரசு கட்சி சார்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் மற்றும் சமத்துவ கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட இன்னும் சிலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் அனுசரணையில் வளர்ச்சி கண்ட பாதாள குழுக்களை முழுமையாக கட்டுப்படுத்த நடவடிக்கை!



நாட்டின் தேசிய பாதுகாப்பு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை.பாதாள குழுக்களிடையே மோதல்கள் வலுப்பெற்றிருந்தாலும் அது பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை. இந்த நாட்டில் பாதாள குழுக்களின் செயற்பாடுகள் மிக நீண்ட காலமாகவிருந்தே வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. இந்த குழுக்களின் தலையீடு பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகளின் தாக்கம் செலுத்தியுள்ளன.இதன் காரணமாக இந்த குழுக்கள் அழிவை ஏற்படுத்தக்கூடிய பாரிய வலையமைப்பாக உருமாறியுள்ளது.

எனவே இந்த குழுக்களை கட்டுப்படுத்த அரசாங்கம் முழு மூச்சாக செயற்படும். இந்த பணியை எம்மால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. குறிப்பாக இதுவரையில் இந்தக் குழுக்கள் அரசியல் அனுசரணையில் வளர்ச்சியடைந்தது. எனினும் தற்போது இந்த குழுக்களுக்கு அரசியல் அனுசரனை கிடைக்கப்போவதில்லை. இந்த பாதாள குழுக்களை முழுமையாக கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

எமக்கு சில தகவல்கள் கிடைத்துள்ளன.அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். குறிப்பாக இந்த மோதல்கள் உண்மையில் இரு பாதாள உலகக்குழுக்களுக்கு இடையில் இடம்பெறும் ஒன்றா? அல்லது அதன் பின்புலத்தில் ஏதேனும் பாரிய சதி முயற்சி உள்ளதா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது.

அது தொடர்பில் நாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

இதேவேளை அரசியல் வங்குரோத்து நிலையடைந்துள்ளவர்கள் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற சுலோகத்தை தற்போது கையிலெடுத்துள்ளார்கள். கடந்த அரசாங்கங்கள் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு பாதாளக் குழுக்களை போசித்தார்கள். எமது அரசாங்கத்தில் பாதாளக் குழுக்களின் செயற்பாடு இல்லாதொழிக்கப்படும் என வீடமைப்பு பிரதியமைச்சர் டி.பி சரத் தெரிவித்தார்.

# வடக்கு மக்களின் உண்மையான தேவை எது?

தையிட்டி விகாரையை முன் வைத்து மதவாதம் மற்றும் இனவாதத்தை தூண்டுவதற்கு சிலர் முயற்சிப்பதான குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி அநுர குமார வழங்கியிருக்கும் பதிலை எவ்வாறு புரிந்து கொள்வது? 'குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மதவாதம் மற்றும் இனவாதத்தைத் தூண்டுவதை அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கும் ஜனாதிபதி, வடக்கு மக்களின் உண்மையான தேவைகளுக்கு அமைவாக பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

வடக்கு மக்களின் உண்மையான பிரச்சனை என்பதால் அவர் குறிப்பிட முற்படுவது என்ன? கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆதரித்திருந்தனர். இதனை ஒரு வரலாற்று மாற்றமாகவே அநுரகுமாரவும் அவரின் அரசாங்கமும் கருதுகின்றது. ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனை வரலாற்று மாற்றமாகவும் தமிழ் மக்கள் இனவாத அரசியலிலிருந்து வெளியில் வந்திருக்கின்றனர் எனவும் பேசிவருகின்றார்.

தமிழ் மக்கள் இனவாதத்திலிருந்து வெளியில் வந்திருக்கின்றனர் என்பதன் மூலம் இதுவரையில் தமிழ் மக்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட அரசியல் நகர்வுகளையே அவர் இனவாத அரசியல் என்று குறிப்பிட்ட முற்படுகின்றார். இராமலிங்கம் சந்திரசேகரனும் அண்மையில் வடக்கு அரசியல் வாதிகளால் தான் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் அரசாங்கத்தின் தமிழர் பிரச்னை தொடர்பான கொள்கை நிலைப்பாடு தெளிவாகவே தெரிகின்றது.

அதாவது தமிழ் மக்கள் தங்களுடைய அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர் எதிர்காலத்தில் இன்னும் அதிகமாக ஆதரிக்கவுள்ளனர். இந்த நிலையில் வடக்கு மக்களின் பிரச்னை என்பது, தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்ற விடயங்கள் அல்ல மக்களின் உண்மையான பிரச்னை என்பதும் அரசியல்வாதிகளின் பிரச்சனை என்பதும் வேறு. கோட்டாபய ராஜபக்ஷவும் இவ்வாறானதொரு பார்வையையே முன் வைத்திருந்தார். அவர் அரசியல் விடயங்களின் நெளிவுசுழிவுகளை அறியாமல் வெளிப்படையாக பேசியிருந்தார்.

வடக்கில் தமிழ் மக்களின் பிரச்னை பொருளாதாரப் பிரச்சனையே தவிர, அரசியல் பிரச்னையில்லை தமிழ் மக்களுக்கு என்று பிரத்தியேக அரசியல் பிரச்னை என்று ஒன்றில்லை அவ்வாறு இருப்பதாக அரசியல்வாதிகள் தான் கூறிவருகின்றனர். ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதனை நிதானமாகவும் தூரநோக்குடனும் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியவாறும் முன்னெடுக்க முயற்சிக்கின்றது. இந்த நிலையில் தான் வடக்கு மக்களின் உண்மையான தேவைகளின் அடிப்படையில் பிரச்சனைகள் தீர்க்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் உண்மையில் கூறுவது வடக்கு மக்கள் இப்போது தையிட்டியை முன்வைத்து பேசப்படும் அரசியலோடு இல்லை அவர்களின் பிரச்சனை வேறு. அந்த உண்மையான பிரச்சனைகளை தனது அரசாங்கம் கருத்தில் கொள்ளும். அனைத்து விடயங்களுமே, கடந்த பொதுத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு தான் உரையாடப்படுகின்றது. ஒருவகையில் அது சரியும்கூட

ஏனெனில் இன்று தையிட்டியை அகற்ற வேண்டும் என்று கூறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியுடன் வடக்கு மக்கள் நிற்கவில்லை. எனவே, இதனை எதிர் கொள்ள வேண்டுமாயின் தமிழ் கட்சிகள் தங்களின் ஜனநாயக வலுவை உள்ளூராட்சி தேர்தல் மூலம் நிரூபிக்க வேண்டும். ஓரளவுக்கு தமிழ் கட்சிகளுக்கு அது மீளவும் ஒரு குரலை வழங்கும்.

# தேசிய ஒற்றுமை - நல்லிணக்கம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு அரசாங்கம் செயலாற்றுமென ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் விஜித்த ஹேரத் தெரிவிப்பு!

சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் 24 பெப் 2025 திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையில் நேற்று இக்கூட்டத்தொடரில் இலங்கை சார்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்தார்

இலங்கையில் இடம் பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆணை அக்கட்டமைப்புக்கு வழங்கப்படும் என்றும் இவ்வாறு நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாக ஸ்தாபிக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமாகவும், நம்பகமான முறையிலும் இயங்கும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அவர் தெரிவித்தார்

எமது நாட்டில் கடந்த ஆண்டு நடைபெற்றுமுடிந்த தேர்தல்களின் ஊடாக அரசியல், பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பை ஏற்படுத்தும் நோக்கில் நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த மக்கள் பெரும்பான்மை வாக்குகள் ஊடாக எம்மைத் தெரிவு செய்தனர்.

அதனையடுத்து இலங்கை வரலாற்றிலேயே எம்மால் கட்டமைக்கப்பட்ட நாடாளுமன்றமே மலையகத்தைச் சேர்ந்த இருவர் உள்ளடங்கலாக அதிகளவு பெண் பிரதிநிதிகளையும், மாற்றுத்திறனாளி ஒருவரையும் உள்ளடக்கிய சகல தரப்பினருக்குமான பிரதிநிதித்துவத்துடன்கூடிய நாடாளுமன்றமாகத் திகழ்கிறது. தற்போது நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்திருப்பதுடன், அதனை சகலருக்குமான சம பங்கீட்டை உறுதிப்படுத்தக் கூடிய பொருளாதாரமாக நிலைமாற்றமடையச் செய்வதை நோக்கி நாம் பயணிக்கிறோம்.

அதே போன்று எமது அரசாங்கம் சமர்ப்பித்துள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் சமூகப்பாதுகாப்பு செயற்திட்டங்களுக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதன் ஊடாக நெருக்கடிக்கு முகங் கொடுத்திருக்கும் மக்களுக்கான நிவாரணத்தை வழங்கியிருக்கிறோம்.

அது மாத்திரமன்றி வட, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றம், வீடமைப்பு மற்றும் நட்டஈடு வழங்கல் ஆகியவற்றுக்கு அவசியமான நிதியொதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நாம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 'க்ளீன் ஸ்ரீலங்கா' செயற்திட்டத்தின் ஊடாக நேர்மைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புக் கூறத்தக்கதுமான ஆட்சி நிர்வாக முறைமையொன்றை நாட்டில் கட்டியெழுப்புவதற்கு உத்தேசித்துள்ளோம்.

அடுத்ததாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு உறுதி பூண்டிருக்கிறது.





அதன்பிரகாரம் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளகப்பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அவை சுயாதீனமானதும், நம்பகத்தன்மை வாய்ந்த முறைமையிலும் இயங்குவது உறுதிசெய்யப்படும்.

அதேபோன்று சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும்.

இலங்கையில் இடம் பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆணை அக்கட்டமைப்புக்கு வழங்கப்படும். இவ்வாறு நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாக ஸ்தாபிக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமாகவும், நம்பகமான முறையிலும் இயங்கும்.

அத்துடன் எமது நாடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புக்களிலும், உப குழுக்களிலும் அங்கம் வகிக்கின்றது. அக்குழுக்களினால் மேற்கொள்ளப்படும் கூட்டங்கள் மற்றும் மீளாய்வுகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிப் பங்கேற்கிறது. நாட்டின் தேசிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக இந்த ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஒற்றுமைக் கோஷத்தின் பின்னால் தமிழரசுக்கட்சியை பிளவுபடுத்த முடியாது! கஜேந்திரகுமாருக்கு தமிழரசுக்கட்சி கொழும்புக் கிளைத் தலைவர் பதில்!



ஒற்றுமை' எனும் கோஷத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு தமிழரசுக் கட்சியைப் பிளவுபடுத்தவும், கட்சித் தலைவர்களை, குறிப்பாக கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனையும், தலைவர் சிவஞானத்தையும் இலக்கு வைத்துத் தாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நாடகம் அரங்கேற்றப்படுவதற்கு கட்சி ஒருபோதும் இடமளிக்காது என்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புரிந்து கொள்ள வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளைத் தலைவர் சி.இரத்தினவடிவேல் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கடந்த 16ஆம் திகதி களுவாஞ்சிக்குடியில் கூடிய போது தமிழர் நலன் மற்றும் கட்சியின் நலன் சார்ந்து பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை அன்றைய தினமே ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டன.

இருப்பினும் கடந்த 22 ஆம் திகதி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் எமது மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானமொன்றைப் பற்றித் தவறான விடயங்களைத் தெரிவித்திருந்ததன் காரணமாக இத் தெளிவுபடுத்தல் அவசியமாகின்றது.

இலங்கைத் தமிழரசுக்கட்சி கடந்த 75 ஆண்டுகளாக சமஷ்டிக் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு, அக்கொள்கை நிலைப்பாட்டில் தொடர்ந்தும் பயணிக்கிறது. அதில் எவ்வித விட்டுக் கொடுப்புகளுக்கும் இடமில்லை. தந்தை செல்வாவுடனும், அண்ணர் அமிர்தலிங்கத்துடனும் அவர்களது சாத்வீக செயற்பாட்டிலும், பின்னர் விடுதலைப்புலிகளின் அரசியல் கோட்பாட்டுடனும் இணைந்து பயணித்த அரசியல் தெளிவுள்ள பலர் இன்னமும் கட்சியுடன் இணைந்து செயற்படுகிறார்கள் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

எனவே தமிழ் மக்களுக்கு உகந்த தீர்வினை எட்டுவது குறித்து கட்சி மிகவும் நிதானமாகவும், தீர்க்க தரிசனத்துடனும் செயற்படுகின்றது. ஆகவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக பாடம் எடுக்கவேண்டிய நிலையில் கட்சி இல்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் அரசியலமைப்பு விவகாரம் குறித்து ஆராய்வதற்காக 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த மத்திய செயற்குழுக்கூட்டம் நடைபெற்ற தினத்தில் இக்குழுவின் முதற்கூட்டமும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலும், மத்திய செயற்குழுவிலும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பதில் கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

அதில் எவ்வித குழப்பங்களும் இடமில்லை. அவ்வாறிருக்கையில் சுமந்திரன் கட்சியின் பதில் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் சி.வி.கே.சிவஞானம் அவரது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, தமக்கு முன்னுக்குப் பின் முரணான பதிலை அனுப்பியிருப்பதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருப்பது மிகவும் அபத்தமானதாகும்.

2016 – 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவு, அதற்கு முன்பும் பின்புமாக வெவ்வேறு அரசாங்கங்களிடம் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் உள்ளிட்ட அனைத்தையும் கருத்திற் கொண்டு, அவற்றில் உள்ள ஏற்புடைய விடயங்களையும், மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களையும் உள்ளடக்கிய யோசனைகளை புதிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் பணி மேற்குறிப்பிட்ட 7 பேரடங்கிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேறு தரப்பினர் ஏதேனும் ஆலோசனைகளை முன் வைத்தால், அவற்றையும் உள்வாங்குவதில் கட்சிக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை

ஆனால் தாம் முன் வைக்கும் யோசனைகளுடன் ஏனைய தரப்பினரும் இணங்கி வர வேண்டும் எனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கடும் நிலைப்பாட்டின் பின்னால் போக வேண்டிய வங்குரோத்து நிலை தமிழரசுக்கட்சிக்கு ஏற்புடையதல்ல. அத்தோடு 'ஒற்றுமை' எனும் கோஷத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு தமிழரசுக்கட்சியைப் பிளவுபடுத்தவும், கட்சித்தலைவர்களை, குறிப்பாக கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனையும், தலைவர் சிவஞானத்தையும் இலக்கு வைத்துத் தாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நாடகம் அரங்கேற்றப்படுவதற்கு கட்சி ஒருபோதும் இடமளிக்காது என்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் இணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நடை பெற்றது. யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள தனியார் மண்டபத்தில் 26 பெப் 2025 புதன்கிழமை குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் தமிழ் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை.

குறித்த கூட்டணியில் தமிழ் மக்கள் கூட்டணி இணைவதா இல்லையா என்பது தொடர்பிலான முடிவு கட்சியின் செயலாளர் நாயகத்துடன் பேசி விரைவில் அறிவிக்கப்படும் என்று அக்கட்சியின் சார்பில் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

# அநுர அரசு மீதான மக்கள் அங்கீகாரம் உயர்ந்துள்ளது! வெரிட்டே ரிசர்ச் நிறுவன ஆய்வு தெரிவிப்பு




கடந்த வருடம் ஜஜீலை மாதத்தில் 24 வீதமாக இருந்த அரசு மீதான மக்கள் அங்கீகாரம் 2025 பெப்ரவரியில் 62 வீதம் என்ற உயர் நிலையை அடைந்துள்ளது. இதன் ஊடாக தேர்தலின் பின்னர் அரசாங்கத்தின் மீது பொது மக்களுக்கு காணப்படும் அங்கீகாரம் அதிகரித்துள்ளதாக வெரிட்டே ரிசர்ச் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் முதல் முறையாக மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் 55 வீதம் இலங்கை பொருளாதாரமானது மேம்பட்டுள்ளதாக' சிந்திக்கின்றனர். எனினும் மக்கள் தொகையில் 47 வீதமானவர்கள் நாட்டின் பொருளாதார நிலைமையானது தற்போதும் 'மோசமான நிலைமையிலேயே' காணப்படுவதாக உணர்கின்றனர். இது கடந்த 2024 ஆம் ஆண்டு ஜீலை மாதத்தில் பதிவான 71 வீதத்தை விடக் குறைவாகும்.

தற்போதைய அரசாங்கம் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா இல்லையா? என்ற கேள்விக்கு பதிலளித்தவர்களில் 62 வீதமானவர்கள் அதை 'அங்கீகரிப்பதாகக் கூறினர். இது முன்னைய 24 வீதத்திலும் பார்க்க இரண்டு மடங்கிற்கும் அதிகம். பதிலளித்தவர்களில் 16 வீதமானவர்கள் மாத்திரம் இதை 'அங்கீகரிக்க மறுத்தனர்'. இது முன்னைய ஆய்வில் 60 வீதமாக இருந்தது.

இதனிடையே ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொருளாதாரமானது முன்னேற்றமடைகிறதா அல்லது மோசமான நிலைக்கு செல்கிறதா? என்ற கேள்விக்கு பதிலளித்த மக்கள் தொகையில் 55 வீதமானோர் 'முன்னேற்றமடைகிறதாகப்' பதிலளித்துள்ளனர்.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இந்த கணிப்பீடானது 30 வீதமாகப் பதிவாகியிருந்தது. இலங்கையின் பொருளாதாரமானது 'மோசமான நிலைக்குச் செல்வதாக' 14 பேர் மாத்திரமே கூறியுள்ளனர். இது முன்னர் 65 வீதமாக இருந்தது.

மேலும் இலங்கையின் பொருளாதார நிலவரமானது 'நல்ல நிலை' அல்லது 'சிறந்த நிலை' அல்லது 'மோசமான நிலையினைக்' கொண்டுள்ளதா என மதிப்பாய்வு செய்யுமாறு கேட்டுக்கொண்ட போது 35 வீதமானோர் பொருளாதாரமானது 'நல்ல நிலை' அல்லது 'சிறந்த நிலைமையை' கொண்டுள்ளது என தரப்படுத்தியுள்ளனர். கடந்த ஜுலை மாதம் 2024 ஆம் ஆண்டு 28 வீதமாக காணப்பட்ட நிலையில் தற்போது அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

இதனிடையே இலங்கையின் பொருளாதாரமானது வீழ்ச்சியான போக்கினையே கொண்டுள்ளது எனவும் 'மோசமான நிலையில்' காணப்படுவதாகவும் 47 வீதம் பேர் தரப்படுத்தியுள்ளனர். முன்னைய ஆய்வில் குறித்த பெறுபேறானது 71 வீதம் ஆகக் காணப்பட்ட நிலையில் தற்போது 24 வீதமாக ஆகக் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்கடை நீதிமன்றத்தில் நடந்த துப்பாக்கிச் சூடும் கணேமுல்ல சஞ்ஜிவ கொலையும் பயங்கரவாத சம்பவமில்லை!



கணேமுல்ல சஞ்ஜீவ கொலை பயங்கரவாத சம்பவமில்லை சந்தேக நபர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார் அவர் சமூக ஊடக பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது கணேமுல்ல சஞ்ஜீவ கொலை சந்தேகநபர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படவுள்ளனர் என்ற தகவல் உண்மை என்றால் இது பயங்கரவாத தடைச் சட்டத்தை துஸ்பிரயோகம் செய்யும் செயல், இது பயங்கரவாத குற்றமல்ல,

பயங்கரவாத குற்றமல்லாதவற்றிற்கு பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தும் போது அது வழமையானதாக மாற்றப்படுகின்றது,

இது அதளபாதாளத்தை நோக்கிய வீழ்ச்சியாகும். தேசிய மக்கள் சக்தி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என தெளிவாக தெரிவித்துள்ளது

நம்பகதன்மை மிக்க புலனாய்வு தகவல்களின் அடிப்படையிலேயே பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படும் என ஜனாதிபதி செயலகத்தின் இயக்குநர் தெரிவித்தார் என ஒக்டோபர் 29ம் திகதி தகவல்கள் வெளியாகியிருந்தன.

அரசியல் பழிவாங்கலுக்காக அதனை பயன்படுத்த மாட்டோம், என அவர் தெரிவித்திருந்தார்.

# விடுதலைப்புலிகள் உட்பட 15 அமைப்புக்களுக்கு தடை நீடிப்பு!

விடுதலைப் புலிகள் உட்பட 15 பயங்கரவாத அமைப்புகளைத் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் நீடிக்கும் வர்த்தமானி அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு வெளியிடப் பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்ய கொண்டாவின் கையொப்பத்துடன் வெளியிடப் பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட அமைப்புகள் அமைப்புகள் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு மீண்டும் நிதி வழங்குவதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளதுடன், அந்த அமைப்புகளின் நிதி சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் முடக்கப் பட்டுள்ளன. பயங்கரவாதத்துடன் தொடர்பு டைய 222 நபர்களின் பட்டியலும் இந்த வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ளது. 15 தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகள் வருமாறு,

தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம், கனேடிய தமிழர் தேசிய அவை , தமிழ் இளைஞர் அமைப்பு, எக்சியூ என்று அறியப் படுகின்ற தலைமையகக்குழு, தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பு, ஜமாதே மிலாதே இப்ராஹிம் அமைப்பு, விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்த பவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம், சேவ் த பேர்ள்ஸ் போன்ற அமைப்புகள் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வன்முறை கும்பல்களை அரசு அகற்ற வேண்டும்

பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஓய்வுநிலை அதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருக்கின்றார். இந்தப் பகுதியில் ஏற்கனவே பலர் இவ்வாறான சம்பவங்களை எதிர்கொண்டிருக்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் மதுபானசாலைகள் அதிகரித்திருக்கின்ற நிலையில் மதுப் பாவனையாளர்களும் இரவு வேளைகளில் அதிகமாக நடமாடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் வன்முறைக் கும்பல்கள் வழக்கத்துக்கு மாறாக அதிகரித்திருக்கும் விடயம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் விடயம் தான். வாள்வெட்டு, காதல் விவகாரத்துக்காக ஆட்களை கடத்துதல், தனிப்பட்ட பகைக்காக துப்பாக்கியால் சுடுவது போன்ற சம்பவங்கள் கடந்த காலத்தில் பதிவாகியிருக்கின்றன.

கடந்த காலத்தில் போதைவஸ்து பாவனை அதிகரிப்பு தொடர்பான விடயங்கள் பேசுபொருளாக இருந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் திட்டமிட்டு வெளியாரால் புகுத்தப்பட்ட விடயங்களாகவே நோக்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக பல புதிய மதுபான சாலைகள் குறிப்பாக கிளிநொச்சி, மன்னார் பகுதிகளில் திறக்கப்பட்டன. இவைகள் எந்த வெளியாரால் புகுத்தப்பட்டன? இது தொடர்பில் அரசியல் மேடைகளிலும் ஒருவரை ஒருவர் விமர்சித்து தங்களின் அரசியலை மேற்கொண்டனர்.

அதிலிருந்து இந்த விடயத்துக்கும் வெளியாருக்கும் ஒரு தொடர்புமில்லை என்பது தெளிவானது. வன்முறைகள் தங்களுக்கு நடக்கும் போது அது ஒரு விடயமாக நோக்கப்படுவதும் மற்றவர்களுக்கு நடக்கும்போது, அது நமக்கு சம்பந்தம் இல்லாத விடயமாக நோக்கப்படுதுண்டு. வடக்கைச் சேர்ந்த அரசியல் மற்றும் சிவில்சமூகத்தினரும் கடந்த காலங்களில் இந்த அடிப்படையில் தான் இந்த விடயத்தை சாதாரணமாக கடந்து சென்றிருக்கின்றனர்.

அரசியல் விடயங்கள் தொடர்பில் தங்களின் மூக்கை அடிக்கடி நுழைக்கும் சிவில் சமூக அமையங்கள் சமூகம் தொடர்பில் அக்கறையற்றவர்களாவே இருப்பதுண்டு. ஆசிரியர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பாதிக்கப்படும் போது ஆசிரியர் சங்கம் கண்டனம் வெளியிட்டிருக்கின்றது. ஆனால், மற்றவர்கள் பாதிக்கப்படும் போது வன்முறைக் கும்பல்களின் செயல்கள் சாதாரணமாக மறக்கப்பட்டு விடுகின்றன.

அவ்வாறில்லாது, இது தமிழ் சமூகத்துக்குள் நுழைந்து கொண்டிருக்கும் ஒரு நோய் இதற்கு ஆரம்பத்திலேயே உரிய மருத்துவம் செய்யாவிட்டால் காலப் போக்கில் வன்முறைக் கும்பல்கள் அனைத்தின் மீதும் மேலாதிக்கம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டு விடலாம்.

அரசியல் விடயங்களிலும் இவ்வாறான வன்முறைக் கும்பல்கள் உள்நுழையும் காலம் வெகுதெலைவில் இல்லை. வடக்கு மாகாண ஆளுநர், பொலிஸ் திணைக்களம், அரசியல் தரப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர் அனைவருமாக இணைந்து, இந்த விடயத்தில் செயலாற்ற வேண்டும். பொலிஸார் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் அதனை பொதுவெளிக்கு கொண்டு வந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஒரு பிரச்னையை சமூகமயப்படுத்தினால் தான் அந்தப் பிரச்னைக்கான தீர்வைக் காண முடியும்.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.**

**இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ் சொற் செல்வர் – சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு. திரு முருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார்.**

**கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிகவிபரங்கள் பின்னர் அறியத் தரப்படும்.**

# பசியுடன் இருப்பவன் தான் பசிக்குரிய உணவைத் தீர்மானிக்க வேண்டும்! புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து ஸ்ரீதரன் தெரிவிப்பு!



தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் எமக்கான தீர்வுத்திட்டத்தைத் தரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மாறாக நாமனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

இப்போது நாங்கள் தான் பசியுடன் இருக்கிறோம். பசியுடன் இருப்பவர்கள் தானே என்ன தேவை என்று கேட்க முடியும்? உணவை வைத்திருப்பவன், பசியுடன் இருப்பவனைப் பார்த்து 'உனக்கு என்ன உணவு வேண்டும்?' என்று கேட்கப் போவதில்லை. எனவே எம்முடைய பசிக்குரிய உணவு எதுவென்பதை நாம் தான் தீர்மானிக்கவேண்டும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்த கலந்துரையாடலுக்க கடிதம் மூலம் அழைப்புவிடுத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பதிலளித்து 21 பெப் 025 வெள்ளிக்கிழமை இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கிறார். அக்கடிதத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப் பிடிப்பதாலும், அதற்கான முன்வரைவு எதனையும் சமர்ப்பிக்கா நிலையிலும் நாம் அரசியலமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதவில்லை என்றும், உரிய நேரம் வரும் போது இதுபற்றிக் கலந்துரையாடலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரத்தில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயலாற்றுவது குறித்து ஆரம்பத்திலிருந்தே முனைப்பைக் காண்பித்துவந்த தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரனிடம் அவரது நிலைப்பாடு தொடர்பில் வினவிய போது, அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் எமக்கான தீர்வுத்திட்டத்தைத் தரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மாறாக நாமனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இப்போது நாங்கள் தான் பசியுடன் இருக்கிறோம். பசியுடன் இருப்பவர்கள் தானே என்ன தேவை என்று கேட்க முடியும்? உணவை வைத்திருப்பவன், பசியுடன் இருப்பவனைப் பார்த்து 'உனக்கு என்ன உணவு வேண்டும்?' என்று கேட்கப் போவதில்லை. எனவே எம்முடைய பசிக்குரிய உணவு எதுவென்பதை நாம் தான் தீர்மானிக்கவேண்டும்.

சுமார் 80 வருடங்களாக தமிழர்களாகிய நாம் உரிமைப்பசியுடன் வாழ்கிறோம். அந்த உரிமைப்பசிக்காக நாம் செய்த தியாகங்கள் அளப்பரியவை. அதற்காக ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்திருக்கிறோம். எனவே எம்முடைய உரிமைப் போராட்டமும், தமிழர் அரசியலும் உரிமைக்காகப் போராடி மாண்ட உயிர்களின் மீதும், சாம்பல் மேட்டின் மீதும் தான் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இற்றைவரை உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழினத்தின் தேவை மற்றும் கோரிக்கை என்னவென்பதை நாங்கள் தான் வெளிப்படையாகக் கூறவேண்டும். மாறாக அரசாங்கம் கூறும் வரை நாங்கள் காத்திருக்கமுடியாது. இவ்விடயத்தில் நாம் (தமிழரசுக்கட்சி) மாத்திரமன்றி, தமிழ்த்தேசியத்தை நேசிக்கும் சகல கட்சிகளும் இணைந்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

எம்மில் சிலர் தம்முடன் மூடிய அறைக்குள் பேசும் போது சமஷ்டி தேவையில்லை எனக் கூறுவதாக இந்தியாவைச் சேர்ந்த அரசியல் நிபுணர்கள் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள். இருப்பினும் அவ்வாறு கூறுபவர்கள் வெளியில் சமஷ்டி பற்றிப் பேசுவதாகவும் அந்நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே தமிழ்த்தேசிய கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தமிழர்களுக்கான தீர்வு குறித்த பொது நிலைப்பாடு என்னவென்பதை அரசாங்கத்துக்கு அறிவித்து விட்டு, பின்னர் எம்மிடம் அதற்கு ஆதரவு கோரினால், அதனை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

அண்மையில் அமெரிக்கத்தூதுவர், பிரித்தானிய அமைச்சர், ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதி தலைமையிலான குழுவினர் உள்ளிட்டோருடன் தனித்தனியாக இடம் பெற்ற சந்திப்புக்களின் போது அவர்களும் 'நீங்கள் அனைவரும் எப்போது ஒன்றுபட்டு செயலாற்றப் போகிறீர்கள்?' என்று தான் எம்மிடம் வினவினார்கள்.

ஆகவே தமிழர்கள் ஒரு பலமான சக்தியாக ஒன்றுபட்டு அவர்களது கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்றே சர்வதேச சமூகம் விரும்புகிறது. அவ்வாறிருக்கையில் நாம் எமக்குள் போட்டியிட்டு, மனக்கசப்புக்களுடன் ஒருவரிலிருந்து ஒருவர் விலகி நின்றால், எமக்கான தீர்வென்பது கிட்டாமலே போய்விடும். இது தனிமனித விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால், ஒரு இனத்தின் அடையாளத்தை முன்னிறுத்திய பயணமாகும். இவ்விடயத்தில் மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைய செயற்பட வேண்டும். மாறாக அதிலிருந்து விலகிச் சென்றால் வரலாறு ஒரு போதும் எம்மை மன்னிக்காது என்றார்.

# புதிய அரசியலமைப்பு வரைவு குறித்து உரிய நேரம் வரும் போது கலந்துரையாடலாம்! கஜேந்திரகுமாருக்கு தமிழரசுக்கட்சி பதில் கடிதம்!

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்த கலந்துரையாடலுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பதிலளித்துக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சி, புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப் பிடிப்பதாலும், அதற்கான முன்வரைவு எதனையும் சமர்ப்பிக்காத நிலையிலும் நாம் அரசியலமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதவில்லை என்றும், உரிய நேரம் வரும்போது இதுபற்றிக் கலந்துரையாடலாம் என்றும் தெரிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரத்தில் தமிழ்த்தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகளின் ஓரங்கமாக புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றில் கூட்டாக செயற்படுவது தொடர்பான கலந்துரையாடல்' எனும் தலைப்பிலான கடிதமொன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் கடந்த ஜனவரி மாத நடுப்பகுதியில் கையளிக்கப்பட்டது.

அக்கடிதத்தில், 'பாராளுமன்றத்தில் 8 ஆசனங்களைக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியும், தலா ஒவ்வொரு ஆசனத்தைக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு புள்ளியில் சந்திப்பதன் மூலம் தமிழர் தாயகத்தில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மையான 10 ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக இக்கலந்துரையாடல் நகர்வு அமைந்துள்ளது. அதன்படி ஜனவரி மாதம் 27 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நடாத்துவதற்கு உத்தேசித்திருக்கும் கலந்துரையாடலில் தங்கள் கட்சியும் பங்கேற்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்' எனக் கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் இது குறித்து தமது கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராய்ந்ததன் பின்னர் பதிலளிப்பதாக சி.வி.கே.சிவஞானம் தெரிவித்ததையடுத்து, மேற்குறிப்பிட்ட சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விடயம் தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி சி.வி.கே.சிவஞானத்தினால் பெப்ரவரி 18 ஆம் திகதியிட்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குக் கிடைக்கப்பெற்ற கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:



புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றத்தில் கூட்டாக செயற்படுவது தொடர்பான கலந்துரையாடல் எனத் தலைப்பிடப்பட்ட உங்களது கடிதம் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற எமது மத்திய செயற்குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப் பிடிப்பதாலும், அதற்கான முன்வரைவு எதனையும் சமர்ப்பிக்காத நிலையிலும் நாம் அரசியலமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாகக் காணப்படவில்லை என உணரப்பட்டது.

மேலும் எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து வலியுறுத்தி வரும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுய நிர்ணய உரிமை என்ற கோட்பாடு இன்னும் வலுவுள்ளதாகவே பேணப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அரசாங்கம் அதன் அரசியலமைப்பு உருவாக்க முன்மொழிவை துரிதமாக முன்வைக்க வேண்டும் என வலியுறுத்திக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. உரிய நேரம் வரும் போது நாம் இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் என அக் புதிய அரசியலமைப்பு வரைவு குறித்து உரிய நேரம் வரும்போது கலந்துரையாடலாம் எனவும் தெரிவித்துள்ளது. (9ம் பக்கம் பார்க்க)

# முன்னணியின் அழைப்பை நிராகரித்த தமிழரசுக்கட்சி!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்புக்கு தமிழரசுக் கட்சி பதில் கூறியிருக்கிறது. அதன்படி ஒரு புதிய யாப்பை நோக்கித் தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கும் நோக்கத்தோடு முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கான அழைப்பை தமிழரசுக் கட்சி நிராகரித்து விட்டது என்று கூடச் சொல்லலாம். உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என்ற பதில் எதைக் குறிக்கிறது? இது அதற்குரிய நேரம் இல்லை என்றுதானே பொருள்?

கட்சித் தலைமையின் நிலைப்பாடு இதுவென்றால் கட்சிக்குள் சிறீதரனின் நிலைப்பாடு என்ன? கஜேந்திரக்குமாரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு அவரோடு தொடர்ச்சியாக சந்திப்புகளை மேற்கொண்டவர் அவர். கட்சித் தலைமையின் நிலைப்பாட்டை மீறி அவர் தனிப்பட்ட முறையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு ஒத்துழைக்கப் போகிறாரா இல்லையா?

இதே போல ஒரு நிலை கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது அவருக்கு ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் ஒரு பகுதி பொது வேட்பாளரை ஆதரித்தது. ஒரு பகுதி பொது வேட்பாளரை மூர்க்கமாக எதிர்த்தது. எதிர்த்த தரப்புக்கு சுமந்திரன் தலைமை தாங்கினார். ஆதரித்த தரப்புக்கு சிறீதரன் தலைமை தாங்கினார்.அதாவது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டிக்குள்ளும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது.

சிறீதரன் சுமந்திரனின் எதிர்ப்பை மீறி தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நின்றார்.அ வருடைய அந்த நிலைப்பாடு குறித்து இரண்டு விதமான வியாக்கியானங்கள் இருந்தன.



ஒன்று அவர் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை கோட்பாட்டு ரீதியாக ஏற்றுக் கொள்கிறார். எனவே அதற்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை எடுத்து கட்சியின் மத்திய குழு அதை எதிர்த்த போதிலும் வெளிப்படையாக அதற்கு ஆதரவாக இயங்கினார். கிளி. நொச்சியில் நடந்த பொது வேட்பாளருக்கு ஆதரவான கூட்டங்களில் அவர் பகிரங்கமாகக் காணப்பட்டார். குறிப்பாக அங்கு ஒழுங்கு செய்யப்பட்ட மிகப் பெரிய பிரச்சாரக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவும் காணப்பட்டார். இது ஒரு வியாக்கியானம்.

இன்னும் ஒரு வியாக்கியானம் உண்டு. அது என்னவென்றால், கட்சிக்குள் ஏற்பட்ட தலைமைப் போட்டிக்குள் அவர் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக நின்றார் என்பது. அதாவது கட்சிக்குள் தனது பேரம்பேசும் சக்தியை பலப்படுத்துவதற்காக அவர் அவ்வாறு ஒரு முடிவை எடுத்தார் என்பது. அதாவது அவர் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நிலைப்பாட்டை எடுத்தார் என்பதை விடவும் தனது உட்கட்சிப் போட்டியாளராகிய சுமந்திரனுக்கு எதிரான ஒரு அணியை பலப்படுத்த விரும்பினார் என்பதே சரி என்ற வியாக்கியானம்.




எதுவாயினும் பொது வேட்பாளரை ஆதரித்ததன் மூலம் சிறிதரன் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு நெருக்கமாக நின்றார். கட்சிக்குள் இருந்த பலமான ஒரு அணியின் எதிர்ப்பை மீறி அவர் துணிச்சலாக முடிவெடுத்தார்.பொது வேட்பாளரை எதிர்த்ததன் மூலம் சுமந்திரன் தேசத் திரட்சிக்கு எதிராக நின்றார்.

இப்பொழுதும் சுமந்திரன் தேசத் திரட்சிக்கு எதிராகத்தான் இருக்கிறார். தமிழ்த் தேசிய அரசியல் எனப்படுவது தமிழ் மக்களை ஆகப்பெரிய திரளாகத் திரட்டுவது. கடந்த 15 ஆண்டுகளாக அவ்வாறு தமிழ் மக்களை ஒரு திரட்சியாகக் கூட்டிக் கட்டுவதற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டைத் தான் சுமந்திரன் எடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்ததில் அவருக்குப் பெரிய பங்கு உண்டு. அதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஆகப்பெரிய கூட்டை உடைத்தார். ஆயுதப் போராட்டத்தின் ஒரு கட்ட வளர்ச்சிக்குப் பின் அதில் ஏற்பட்ட பண்புரு மாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட அதிகம் சாம்பல்தன்மை மிக்க ஒரு கூட்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு காலம் தன்னால் அரங்கில் இருந்து அகற்றப்பட்ட கட்சிகளையும் அமைப்புகளையும் ஏற்றுக் கொண்டதன் விளைவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழித்ததில் சுமந்திரனுக்குப் பெரிய பங்கு உண்டு.

அதன் விளைவாக தமிழரசுக் கட்சி மட்டும் மிஞ்சியது. இப்பொழுது தமிழரசுக் கட்சியும் இரண்டாகி விட்டது. அதற்கும் சுமந்திரன் பொறுப்பு. தனது சொந்தக் கட்சிக்குள் ஒரு திரட்சியை ஏற்படுத்த முடியாத ஒரு தலைவர் எப்படித் தேசத் திரட்சியை ஏற்படுத்தலாம்? எனவே சுமந்திரன் செய்வது தமிழ்த் தேசிய அரசியல் அல்ல.

பொது வேட்பாளரில் அவர் எடுத்த நிலைப்பாடும் அதுதான். நாடாளுமன்றத் தேர்தலில் அவர் எடுத்த நிலைப்பாடும் அதுதான். கடந்த வாரம் கஜேந்திரக்குமாருக்கு சிவஞானம் அனுப்பிய பதிலும் தேசத் திரட்சிக்கு ஆதரவானது அல்ல.

தேசத் திரட்சியைப் பாதுகாக்க விட்டால் என்ன நடக்கும் என்பதற்கு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் ஒரு பாடம். நாடாளுமன்றத் தேர்தல் தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் மட்டுமல்ல சுமந்திரனுக்கும் தனிப்பட்ட முறையில் ஒரு பாடம் கிடைத்தது. தமிழ் மக்கள் அவரை நிராகரித்தார்கள்.

கடந்த ஆண்டில் சுமந்திரனுக்கு இரண்டு கசப்பான பாடங்கள் கிடைத்தன. ஆண்டின் தொடக்கத்தில் அவருடைய கட்சியாட்களே அவரை நிராகரித்தார்கள். ஆண்டின் முடிவில் தமிழ் மக்கள் அவரை நிராகரித்தார்கள். இந்த இரண்டு தோல்விகளிலிருந்தும் அவர் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்தத் தோல்விகளை ஏற்றுக் கொள்ள மறுத்து அவர் கட்சியைத் தொடர்ந்தும் எப்படித் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்று திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறார்.

இப்பொழுது கட்சி படிப்படியாக அவருடைய கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது. சிறீதரனின் நிலை மேலும் கேள்விக்குள்ளாகியுள்ளது. ஆனால் சிறீதரன் தானாக கட்சியை விட்டு நீங்க மாட்டார் என்று தெரிகிறது. அப்படி என்றால் அவரை கட்சியை விட்டு நீக்குவது தான் சுமந்திரன் அணியின் அடுத்த நகர்வாக இருக்கலாம்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே அரியநேத்திரனை நீக்கி விட்டார்கள். தமிழரசியல் வரலாற்றிலேயே அதிக வாக்குகளைப் பெற்ற ஓர் அரசியல்வாதி அவர். பொது வேட்பாளராக அவருக்கு மூன்று மகத்துவங்கள் உண்டு. முதலாவது தமிழ் அரசியல் வரலாற்றில் அதிகம் வாக்குகளைப் பெற்ற ஒரு தமிழ் அரசியல்வாதி அவர். இரண்டாவது கிழக்கில் இருந்து வந்த ஒரு தமிழ் வேட்பாளருக்கு வடக்கே கிடைத்த ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள். அவை தாயக ஒருமைப்பாட்டுக்கு கிடைத்த வாக்குகள்.

தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய கருத்துருவாக்கிகளில் ஒருவர் ஓர் ஊடக முதலாளியைச் சந்தித்து உரையாடிய பொழுது அவர் கேட்டார். கிழக்கில் இருந்து வரும் ஒரு வேட்பாளருக்கு பத்தாயிரம் வாக்குகளாவது கிடைக்குமா? என்று. தமிழ் பொது வேட்பாளருக்கு அதிகம் உதவிய அந்த ஊடக முதலாளி பின்னர் பொது வேட்பாளருக்கு கிடைத்த வாக்குகளைக் கண்டு வியந்தார். அவை தாயக ஒருமைப்பாட்டுக்கும் தேசத் திரட்சிக்கும் கிடைத்த வாக்குகள்.

அந்த வாக்குகளுக்கு மற்றொரு முக்கியத்துவம் உண்டு. கடந்த 15 ஆண்டு கால தமிழ் அரசியலில், கொழும்பின் நகர்வுகளுக்குப் பதில் வினையாற்றும் ஒரு போக்கில் இருந்து மாற்றி தமிழ் மக்கள் அதனை செயல்முனைப்போடு அணுகலாம் என்ற முன்னுதாரணம் அது. அதாவது ப்ரோ ஆக்டிவாக அணுகலாம் என்ற முன்னுதாரணம் அது.

அத்தகைய முன்னுதாரணத்தின் வேட்பாளர் ஆகிய அரியநேத்திரனை கட்சியிலிருந்து நீக்கியமை என்பது தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தேசத் திரட்சிக்கு எதிராகத் திரும்பி விட்டது என்பதைத்தான் காட்டுகிறதா? அதற்குள் சிறீதரனைப் போன்றவர்கள் தொடர்ந்தும் இருந்து என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை. கட்சிக்குள் தொடர்ந்தும் நிலைத்திருப்பதன் மூலம் சுமந்திரனை அகற்றலாம் என்று சிறிதரன் திட்டமிடுகிறாரோ தெரியவில்லை.

ஆனால் சுமந்திரனுக்கு எதிரான அணிகளோடு அவர் சேர்க்கைகளை வைத்துக் கொள்வதன் மூலம் கட்சிக்குள் தன்னைப் பலப்படுத்த விளைகிறார் என்பது உண்மை. பொது வேட்பாளரின் விடயத்திலும் அவர் அதைச் செய்தார். முன்னணியின் ஒன்றிணைப்பு முயற்சிகளிலும் அவர் அதைத் தான் செய்கிறார். இப்பொழுது அந்த விடயத்திலும் கட்சித் தீர்மானத்துக்கு எதிராக அவர் செயற்பட வேண்டிய நிலைமை தோன்றியிருக்கிறது. சிதறிக்கொண்டு போகும் கட்சிக்குள் தனது ஸ்தானத்தைப் பாதுகாப்பதா? அல்லது தேசத் திரட்சியைப் பாதுகாப்பதா?

### ரெலோவுக்கு தமிழரசு அழைப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவத ற்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை (ரெலோ) கலந்துரையாடலுக்கு வரு மாறு தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அழைப்பு விடுத்துள்ளார். எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒரே நிலைப்பாட்டில் உள்ள தமிழ் கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் விதமாக குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலுக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல் வம் அடைக்கலநாதன் நாடாளுமன்ற அமர்வுகள் இடம் பெறுவதால் தான் கொழும்பில் நிற்பதாகவும் குறித்த திகதி ஒன்றில் குறித்த கலந்துரை யாடலை நடத்தலாம் எனவும் பதில் வழங்கியுள்ளார். இந்தக் கலந்துரையாடலானது இந்த வார இறுதியில் இடம் பெற உள்ளது.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி
# உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


21 பெப்ரவரி 2025 - 28 பெப்ரவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம்

மலர்வு:- 02.04.1927 உதிர்வு:-22.02.2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு சிவபதம் அடைந்த அமரர் டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களின் 13வது ஆண்டு நினைவு நாள் 01 மார்ச் 2025 சனிக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களை நினைவு கூர்ந்து சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு தினம் 20 பெப்ரவரி 2025 வியாழக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 16 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம்

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 24 பெப்ரவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சீனித்தம்பி செல்வம்

அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 16வது ஆண்டு நினைவுநாள் 18 பெப்ரவரி 2025 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கீதபூஷணம் இசை ஆசிரியர்
### திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாள் 17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



16 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



18 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



22 பெப்ரவரி 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதாகளின் செல்வப்புதல்வன் மிதுலன் நந்தகுமாரின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மிதுலன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



24 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வி காயத்திரி புஸ்பராஜ் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி காயத்திரி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



24 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## மரண அறிவித்தல்



மலர்வு
25-04-1963

உதிர்வு
21-02-2025

## திரு அருந்தவராஜா சின்னதுரை
(நீர்வேலி-கனடா)

அன்னார் நீர்வேலியை சேர்ந்த காலம்சென்ற சின்னத்துரை சிவகொழுந்து தம்பதிகளின் மகனாவார்

அன்னாரின் புதவுடல் North Toronto Crematorium பங்குனி 2, 2025 மாலை 2:00 மணிமுதல் 5:00 மணி வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு, மாலை 5:00 மணிக்கு தகனம் செய்யப்படும்

Address: North Toronto Crematorium Inc.
2 Stalwart Industrial Drive
Gormley, ON

Contact Info:
Thivakar Arunthavarajah - (416) 602-9319
Siva Anna - (416) 648-1987

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

# கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
# சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
# சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. **ஏப்பிரல் 27, 2025**ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ....................

குடும்பப் பெயர்: ....................

பிரிவு: ....................

பிறந்த திகதி: ....................

தொலைபேசி எண், email: ....................

....................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com


மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**


AYUR CARE
KERALA AYURVEDA MASSAGE & THERAPY


வலி நிவாரண
உத்தரவாதம்
ஐந்து அமர்வுகளில்

@கட்டுப்படியான $விலையில்





சிகிச்சை
கழுத்து மற்றும்
தோள்பட்டைவலி
முதுகு வலி
முழங்கால் வலி
கால் வலி
கை வலி




உங்களை இயற்கையுடன் ஒன்றி வாழுங்கள்


எங்கள் சேவைகள்
✓ தலை மசாஜ்
✓ நீராவி குளியல்
✓ ஓய்வெடுத்தல்
✓ அரோமா மியூசிக் தெரபி
✓ தியானமும் புத்துணர்ச்சியும்
✓ முழு உடல் மசாஜ் மற்றும் நிராவி குளியல்

BOOK NOW
647-278-3846

240 ALTON TOWER CIRCLE,
UNIT 301, SCARBOROUGH,
ON M1V 4P2 VIA MCCOWAN RD.

ayurcaretoronto@gmail.com

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# Celebrating 32 years of excellence, Eelanadu, a Tamil community newspaper in Canada

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா



Kalaimamni, **Dr. Nithyasree Mahadevan** presents

## Sangeetha Sangamam 2025 - Carnatic Musical Concert

கலைமாமணி **டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன்** வழங்கும்

## சங்கீத சங்கமம் 2025



சிறப்புரை

## வேர்களைத் தேடுங்கள்

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்

**Sunday, June 1, 2025 @ 5:30pm**

**METROPOLITAN CENTRE**

3840 FINCH AVE EAST

SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு

ஈழநாடு பரமேஸ்

416-841-9600

eelanadu1993@gmail.com



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு முன்னர் தலைமைகளின் அரசியல் அணுகுமுறையில் மாற்றம் வேண்டும் - சந்திரிகா பேச்சு

எந்தவொரு அரசியலமைப்பு மறுசீரமைப்பையும் மேற்கொள்வதற்கு முன்னதாக நாட்டின் அரசியல் சூழ்நிலையிலும் தலைவர்களின் அரசியல் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட வேண்டுமெனவும், அன்றேல் அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியாதெனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக் காட்டியுள்ளார்.



புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் 25 பெப் 2025 செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு ஜானகி ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். அவர் மேலும் கூறியதாவது,

அரசியல் கட்சிகள் பொறுப்பற்றவையாகவும், தேசிய நலன்கள் தொடர்பில் சிந்திக்காதவையாகவும் அடுத்த தேர்தலில் என்ன செய்யலாம்? வெல்வோமா, தோற்போமா என சிந்திப்பவையாகவும் இருக்கும் தற்போதைய சூழ்நிலையில் நாம் இதனை எவ்வாறு செய்யப் போகிறோம்? முன்னைய அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட சிறந்த செயற்திட்டமொன்று இடை நிறுத்தப்பட்டாலும் அவர்கள் வருந்தப்போவதில்லை.

இலங்கையை பொறுத்தமட்டில் முதலாவதாக அரசியல் நெறிமுறைகள் மாற்றமடைய வேண்டும். அரகயல அதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அரகலயவின் ஊடாக வெளிப் படுத்தப்பட்ட மிக வலுவான செய்தியை இன்னமும் பாரம்பரிய அரசியல் கட்சிகள் சரிவர புரிந்துணரவில்லை என்றே தெரிகிறது. அவர்களுக்கு அதனை செவிமெடுக்க வேண்டியதில்லை.அவர்களுக்கு அது புரியாது.

நாம் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முன்னெடுத்த முயற்சிகள் யாவும் பாராளுமன்றத்துக்குள்ளிருந்து தூக்கியெறியப்பட்டன. எனவே வேறெதனையும் செய்வதற்கு முன்பதாக, ஏற்கனவே தயாரிக்கப் பட்ட பல அரசியலமைப்பு வரைபுகள் நிலுவையில் உள்ளன. அவற்றை ஒன்றிணைத்து, தற்கால சூழ்நிலைக்கு பொருத்தமானதொரு வரைபை தயாரிப்பது இலகுவானதாக இருக்கும். எந்தவொரு அரசியலமைப்பு மறுசீரமைப்பையும் மேற்கொள்வதற்கு முன்னதாக நாட்டின் அரசியல் சூழ்நிலையிலும் தலைவர்களின் அரசியல் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். அன்றேல் அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

நாம் பாராளுமன்றத்தின் தன்மையை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும். இப்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்போரில் பெரும்பான்மையானோர் அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளை நிராகரித்துள்ளனர். இல்லாவிடின் அவர்களது கட்சி அதனை நிராகரித்துள்ளது. அவ்வாறிருக்கையில் தற்போது மாத்திரம் அவர்களால் இதனை எவ்வாறு செய்ய முடியும் என எனக்குத் தெரியவில்லை என்றார்.


இதேவேளை இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய அரசியலமைப்பில், குறிப்பாக நிறைவேற்றதிகாரத்தில் மேற்கொள்ளப்படும் தொடர் திருத்தங்கள், அரசியலமைப்புத் திருத்தங்கள் அரசியல் மயப்படுத்தப்படக்கூடிய அச்சுறுத்தலைக் காண்பிக்கின்றது. அரசியலமைப்பானது அரசியல் நலன்களுடன் பிணைந்ததாக இருக்கக் கூடாது. மாறாக அது ஒட்டுமொத்த மக்களினதும் கூட்டு நலனைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும். எனவே நாம் முன்நோக்கிப் பயணிப்பதற்கு, இலங்கையில் சகலரையும் உள்ளடக்கிய, அரசியல் மயப் படுத்தப் படாத அரசியலமைப்பு உருவாக்க செயன்முறையொன்று முன்னெடுக்கப் படுவதை உறுதிப்படுத்த வேண்டும்

ஜவகர்லால் நேருவினால் 1951 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கருத்து, அடிக்கடி திருத்தங்களுக்கு உட்படுத்தப்படக் கூடாத அரசியலமைப்பின் மேன்மைத் தன்மையைக் காண்பிக்கின்றது. இருப்பினும் இலங்கையின் அரசியலமைப்பானது கடந்த இரு தசாப்தகாலத்தில் 17ஆவது திருத்தம் முதம் 21 ஆவது திருத்தம் வரை பல திருத்தங்களுக்கு உள்ளாகியிருக்கின்றது. இத்திருத்தங்கள் அவை மேற் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் நிலவிய அரசியல் மற்றும் சமூக ரீதியான வல்லாதிக்கம் அரசியலமைப்பின் நேர்மைத் தன்மையையும், அரசியலமைப்பு வாத கோட்பாட்டையும் புறந்தள்ளியிருப்பதைப் பிரதிபலிக்கின்றன என்றார்.


NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM
Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS
9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722
2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

# தேர்தல் ஆண்டில் தையிட்டி விகாரை

அரசியல் சமூகச் செயற்பாட்டாளரான செல்வின் அண்மையில் சொன்னார், பலாலியில் தரையிறங்கும் ஒரு விமானத்தின் பருந்துப் பார்வையில் முதலில் தெரியப் போவது தையிட்டி விகாரை தான். பகலில் சூரிய ஒளியிலும் இரவில் இருளின் பின்னணியில் மின்னொளியில் முழிப்பாகத் தெரியப்போவதும் விகாரையாகத் தான் இருக்கும். எனவே பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கும் ஒரு விமானப் பயணிக்கு யாழ்ப்பாணத்தின் தரை தோற்றத்தில் முதலில் முழிப்பாகத் தெரிய போவது தையிட்டித் தாதுகோபமா?

தையிட்டியிலிருந்து சுமார் 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மாதகல் சம்பில்துறை ஏற்கனவே ஜம்புகோளப் பட்டினமாக பெயர் மாற்றப்பட்டு சிங்கள பவுத்த மயப்படுத்தப்பட்டு விட்டது. அங்கே ஒரு பெரிய விருந்தினர் விடுதி உண்டு. அது யுத்த வெற்றி வாதத்தின் சுற்றுலாவிகளாக வரும் சிங்கள பௌத்த பயணிகளைக் கவரும் நோக்கிலானது. அதையும் படைத்தரப்பே பரிபாலித்து வருகிறது. அங்கேயும் தனியார் காணிகள் பறிக்கப்பட்டிருப்பதாக குற்றச் சாட்டுக்கள் உண்டு. இப்படிப்பட்டதோர் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்த மயமாக்கற் பின்னணியில் தையிட்டி விகாரையை விட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்குமா?

அண்மையில் உயிர் நீத்த ஊடகவியலாளராகிய பாரதியின் இறுதி நிகழ்வுக்கு வந்திருந்த கொழும்பை மையமாகக் கொண்ட ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் பின்வருமாறு சொன்னார், தையிட்டி விகாரையின் மையப் பகுதி அதாவது தாதுகோபம் அமைந்திருக்கும் காணி ஒரு மலேசிய ஓய்வு ஊதியருக்குரியது, அவருடைய உறவினராகிய ஒரு பெண் மலேசியாவில் வசிக்கிறார், அவர் சில ஆண்டுகளுக்கு முன் சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுது அவரைச் சந்தித்து அது தொடர்பாக உரையாடியிருக்கிறார். அதன் பின் அவர் அப்போதிருந்த தளபதி சவேந்திர சில்வாவையும் சந்தித்ததாகத் தகவல் உண்டு'' என்று.

இந்த விடயத்தை நான் அண்மையில் யாழ்.திண்ணை விடுதியில் நடந்த ஐநாவின் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட சுமந்திரனைக் கண்ட பொழுது கேட்டேன். அவர் அத்தகவல்கள் உண்மையானவை என்று சொன்னார். அந்தப் பெண் கிட்டத்தட்ட 80 வயதைக் கடந்தவர் என்று கூறப்படுகிறது. அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார் அல்லது அவர் இருக்கிறாரா இல்லையா போன்ற விவரங்கள் சுமந்திரனுக்குத் தெரியவில்லை.

ஆனால் காணி உரிமையாளர் வெளிநாட்டில் என்பது உண்மையான தகவல் அல்ல என்று சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபையின் முன்னாள் உறுப்பினர் சசீவன் கூறுகிறார். அப்போதிருந்த தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தலைவர் இது தொடர்பில் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை என்றும், விகாரை கட்டப்பட்டதற்கு அவரும் பொறுப்பு என்று சசீவன் குற்றஞ் சாட்டுகிறார்.

காணி உரிமையாளர் மலேசியாவில் என்று கூறப்படுவதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வட்டாரங்கள் வேறு விதமாகப் பார்க்கின்றன. தையிட்டிப் போராட்டத்தின் எழுச்சியை திசைதிருப்பும் நோக்கத்தைக் கொண்ட தகவல்கள் இவை என்று அவர்கள் கருதக்கூடும். அவர்கள் தையிட்டி விகாரையை ஒரு சட்டவிரோத கட்டுமானம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

ஆனால் அதை சட்டரீதியாக மட்டும் அணுகக்கூடாது. அதை ஏன் தனிய சட்ட ரீதியாக மட்டும் அணுகக் கூடாது? ஏனென்றால் சட்டவிரோதமானது பிழையானது என்றால் சட்ட ரீதியானது சரியானது என்பதே தர்க்கம். சட்ட ரீதியானது சரியானது என்றால் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் சட்டக் கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்று நம்பலாமா? இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பின் கருவிகளில் சட்டமும் ஒன்று. அண்மையில் அரசியல் பேசும் இளையோர் என்ற அமைப்பின் மெய்நிகர் சந்திப்பில் சுட்டிக் காட்டப்பட்டது போல திருகோணமலையில் பஸ் நிலையத்தில் கட்டப்பட்ட இரண்டு புத்தர் சிலைகளுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய கட்டளை உண்டு. அனால் சிலைகள் அகற்றப்படவில்லை. கிழக்கில் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராக நீதிமன்றக் கட்டளை உண்டு. முல்லைத்தீவில், நீராவியடியில், நீதிமன்றத் கட்டளையை மீறி பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஒரு பிக்குவின் உடல் தகனம் செய்யப் பட்டது. அதுபோல பல இடங்களில் நீதிமன்றக் கட்டளைகளை மீறி சிங்கள பௌத்த மயமாக்கலும் நில ஆக்கிரமிப்பும் நடந்திருக்கிறது. நடந்து கொண்டிருக்கிறது. எனவே இலங்கைத்



தீவின் சட்டக் கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நீதியைத் தரும் என்ற தோற்றத்தை ஏற்படுத்த முடியாது.

மாறாக தையிட்டி விகாரை விடயத்தை நிலப்பறிப்பு,சிங்கள பௌத்த மயமாக்கல் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாகவே பார்க்க வேண்டும் அணுக வேண்டும் அதற்கு எதிராகப் போராட வேண்டும்.

கடந்த பௌர்ணமி நாளன்று நடந்த போராட்டம் குறிப்பிடத்தக்கது. ஆனால் ஒவ்வொரு பௌர்ணமி நாளில் மட்டும் போராட்டலாமென்றால் அது மிகப் பலவீனமானது. ஏனென்றால் நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் பௌர்ணமிகளுக்காக காத்திருப்பதில்லை. அவை மிகவும் நிறுவனமயப்பட்ட நடவடிக்கைகள். இக் கட்டுரை எழுதப்படுகையில் கூட எங்காவது ஒரு சிறு குன்றில் ஏதாவது ஒரு விகாரைக்கு ஒரு செங்கல் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

எனவே ஒவ்வொரு போயா தினத்தன்றும் போராடி தையிட்டியை மீட்க முடியாது. நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிரான போராட்டம் மாதத்தில் ஒரு தடவை மட்டும் நடத்தப்படும் ஒன்றாக இருக்க முடியாது. ஏனென்றால் நில அபகரிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் தொடர் நடவடிக்கைகள். பல தசாப்தகால தொடர்ச்சியான நடவடிக்கைகள்.மிகவும் நிறுவனமயப்பட்ட, அதிக வளம் பொருந்திய அரசு உபகரணங்களால் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்ச்சியான நடவடிக்கைகள்.

அதாவது சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் -அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் - தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்கும் நடவடிக்கைகள் கடந்த பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக 2009க்குப் பின்னரும் அது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ் எதிர்ப்புத் தான் குறைந்து போய் விட்டது.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிராகத் தொடர்ச்சியாகப் போராட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் தமிழ்த் தரப்புக்கு உண்டு. அடுத்த பௌர்ணமி வரை இன்னுமொரு எழுச்சிக்காகக் காத்திருப்பது பலமானது அல்ல.

தமிழ் மக்களுடைய போராட்டத்தின் அளவு தான் இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முடிவையும் தீர்மானிக்கும். ஏனென்றால் இது ஒரு தேர்தல் ஆண்டு. இந்த ஆண்டில் சிங்கள பௌத்த வாக்காளர்களின் வாக்குகளைக் கவர்வதா? அல்லது தமிழ் மக்களுடைய பயங்களை நீக்குவதா? என்று பார்த்தால், அரசாங்கம் சிங்கள பௌத்த வாக்காளர்களின் கூட்டு உணர்வை பாதுகாக்கவே முன் நிற்கும்.



தையிட்டிப் போராட்டத்தின் பின்னணியில் அரசுத் தலைவர் வல்வெட்டித் துறைக்கு வருகிறார். பிரதமர் வலிகாமத்தின் பல பகுதிகளுக்கும் வருகிறார். மானிப்பாயில் வைத்து பிரதமர் கூறுகிறார், இது தமிழ் மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்று.

அதேசமயம் அமைச்சர் சந்திரசேகரன் மீனவக் கிராமங்கள் தோறும் தீயாக வேலை செய்கிறார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தில் ஒருவித இந்திய எதிர்ப்பை லோக்கலாக வெளிப் படுத்துகின்றது. இந்திய மீனவர்களுக்கு எதிராகத் திட்டவட்டமான நிலைப் பாட்டை எடுப்பதன் மூலம் தமிழ் கடல் தொழிலாளர் சங்கங்களைக் கவர்வது அவர்களுடைய உள்நோக்கம்.



**கட்டுரையாளர்:**
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –


அண்மையில் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையும் தமிழ் மக்களைக் கவரும் நோக்கிலானது. ரணில் விக்கிரமசிங்க எரித்த நூலகத்தை நாங்கள் அபிவிருத்தி செய்கிறோம் என்ற பொருள்பட சந்திரசேகரன் முக நூலில் ஒரு பதிவை போட்டிருக்கிறார். நூலக எரிப்புக்கு ரணில் எப்பொழுதோ மன்னிப்புக் கேட்டு விட்டார். ஆனால் வடக்குக் கிழக்கை பிரித்தமைக்கு சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எனப் படும் மனிதநேயக் கட்டமைப்பை எதிர்த்தமைக்கு இறுதிக்கட்டப் போரில் மகிந்தவைப் பலப்படுத்தியதற்கு ஜேவிபி இன்று வரை மன்னிப்புக் கேட்கவே இல்லை. நூலகத்துக்கு நிதி ஒதுக்கியதன் மூலம் படித்த தமிழ் நடுத்தர வர்க்கத்தைக் தவறலாமா என்று அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அதாவது விரைவில் வரக் கூடிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்.பின்னர் வரக்கூடிய மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை இலக்கு வைத்துத் தமிழ் வாக்குகளைக் கவரும் நோக்கத்தோடு அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் இறங்கி வேலை செய்கின்றது. ஆனால் பிரதமர் ஹரிணி கூறுவது போல இந்த அரசாங்கம் தமிழ் மக்களாலும் தெரிவு செய்யப்பட்டது என்றால் தையிட்டி விகாரை விடயத்தில் தமிழ் மக்களின் பயத்தையா அல்லது சிங்களபௌத்த கூட்டு உளவியலையா அதிகமாக மதிக்கும்?

வரவுசெலவுத் திட்ட அறிக்கையை முன் வைத்து உரையாற்றிய அனுர பின்வருமாறு கூறுகிறார்...எங்களில் யாரும் லஞ்சம் எடுப்பதில்லை. அப்படி எடுத்தால் அவர்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது. ஊழல் இல்லாத ஆட்சியை உருவாக்குவேன். லஞ்சம் வாங்கப் பயப்படும் நாட்டை உருவாக்குவேன்.அப்படிப்பட்ட ஆட்சியால் மட்டும் தான் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

அவர் கூறுவது சிங்கள மக்களுக்குப் பொருந்தலாம். ஆனால் தமிழ் மக்களுக்குப் பொருந்தாது. தமிழ் மக்கள் ஊழலுக்கு எதிராகவோ அரசு நிர்வாக துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவோ போராடவில்லை. நமது தேசிய இருப்பை அழிக்க முற்படும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகத்தான் போராடி வருகிறார்கள். எனவே தமிழ் மக்கள் கேட்பது தமது தேசிய இருப்பைப் பாதுகாக்க வேண்டும் என்றுதான்.

ஊழலற்ற ஆட்சியால் தான் நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்று கூறுவது தவறு. இனவாதமற்ற, இன அழிப்புக்கு பரிகாரம் தரத் தயாராக உள்ள,அதாவது, இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தேவையான அரசியல் திடசித்தத்தை பொலிட்டிக்கல் வில்லைக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தால் மட்டுந்தான் இச் சிறிய தீவைக் கட்டியெழுப்ப முடியும்.

# அதானி விலகல் இலங்கைக்குப் பாதகமா?

மன்னார் மற்றும் பூநகரியில் ஒரு பில்லியன் டொலரை காற்றாலை மின் திட்டங்களில் முதலீடு செய்யும் தீர்மானத்தில் இருந்து. இந்தியாவின் மிகப் பெரிய செல்வந்தரான கௌதம் அதானி விலகிக் கொண்டிருக்கிறார். அவரது அதானி கிறீன் நிறுவனம் 484 மெகா வாட் உற்பத்தி திறன் கொண்ட காற்றாலை மின் திட்டங்களை மன்னார் மற்றும் பூநகரியில் அமைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் உடன்பாடு செய்து கொண்டது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அதானி கிறீன் நிறுவனத்திற்கு இரண்டு விதமான சிக்கல்கள் காணப்பட்டன. ஒன்று சுற்றுச்சூழல் ஆபத்துக்கள் தொடர்பாக, உள்ளூர் மக்களிடம் இருந்து எழுந்த எதிர்ப்பு. இன்னொன்று அரசியல் மாற்றத்தினால் உருவாகிய புதிய சூழல். அதானி கிறீன் நிறுவனம் இந்தப் பெரிய திட்டத்தில் முதலீடு செய்வதற்கு இணங்கிய போது, அதற்கு எதிராக மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் தமது எதிர்காலம் குறித்த கவலை எழுந்தது.

காற்றாலைகளால் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள், சுற்றுச்சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள், வாழ்வாதார பாதிப்புகள் என அவர்களால் பல்வேறு கவலைகள் தெரிவிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும் என்று மன்னார் ஆயர் மற்றும் பொது அமைப்புக்களால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.


இந்த விவகாரத்தில் உள்ளூர் மக்களை சமாதானப்படுத்துவதில் அதானி கிறீன் நிறுவனமோ அரசாங்கமோ அல்லது இந்தியாவோ வெற்றி பெறவில்லை. மக்கள் மத்தியில் உள்ள கவலைகளை அவர்களால் நிவர்த்தி செய்யக் கூடிய நிலை இருக்கவில்லை. இது அதானி நிறுவனத்துக்கு ஏற்பட்ட முதலாவது சிக்கல்.

தமது முதலீட்டுத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக காத்திருக்க வேண்டிய நிலை அந்த நிறுவனத்துக்கு ஏற்பட்டது. இதனால் சட்டப் போராட்ட முடியும் வரை, அதானி குழுமம் தமது முதலீடுகளைப் பற்றி சிந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது.

ஒரு மிகப்பெரிய நிறுவனம் ஒரு உடன்பாட்டில் கையெழுத்திட்டு விட்டு அந்த முதலீட்டை முன்னெடுக்க முடியாமல் இருப்பது, அந்த நிறுவனத்தின் மதிப்பை குறைக்கும். அந்த வகையில் அதானி குழுமம் நீண்ட சட்டப் போராட்டத்திற்குள் சிக்கி இருக்கும் இந்த திட்டத்தில் இருந்து விலகிக் கொள்ள முடிவு செய்திருக்கிறது. அவர்கள் இந்த முடிவுக்கு வந்ததற்கு இன்னொரு காரணம் இருக்கிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழலே அது.

ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றதும், பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றியதும், அதானி கிறீன் நிறுவனத்திற்கு சாதகமான முதலீட்டு சூழலை இல்லாமல் செய்துவிட்டது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால், அதானி கிறீன் நிறுவனத்தின் உடன்பாட்டை இரத்து செய்வோம் என்று தேசிய மக்கள் சக்தி கூறிவந்தது.

ஆனாலும் ஆட்சிக்கு வந்தவுடன், அது பற்றிப் பேசவில்லை. ஏனென்றால், அதானி கிறீன் நிறுவனத்தை இந்தத் திட்டத்தில் இருந்து வெளியேற்றும் முடிவை எடுக்கும் போது அதற்கு சரியான காரணம் முன் வைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், இந்தியாவுடன் பகைமையை ஏற்படுத்திக் கொள்ள நேரிடும்.



அதானி குழுமம் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா போன்றவர்களின் மாநிலமான குஜராத்தை தளமாகக் கொண்டது. பா.ஜ.க. அரசாங்கத்திற்கு அதிக நிதி அளிக்கும் நிறுவனங்களில் ஒன்றாக அதானிகுழுமம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிறுவனத்தை, அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் திடீரென தூக்கி எறிந்து விட்டால், அது இந்தியாவுக்கு கோபத்தை ஏற்படுத்தும். ஏற்கெனவே சீனாவின் சார்பான அரசாங்கம் என்ற பெயரோடு ஆட்சிக்கு வந்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இப்படி ஒரு முடிவை எடுக்கின்ற போது நிலைமையை இன்னும் மோசமாக்கும்.

இந்த இடத்தில் அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் நாசுக்காக காய்களை நகர்த்தியிருக்கிறது. அதானி கிறீன் நிறுவனத்தை 'வெளியே போ' என்று கழுத்தைப் பிடித்து தள்ளுவதற்கு பதிலாக அவர்களாகவே வெளியேறுகின்ற சூழலை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எப்படி விஜேராம மாவத்த இல்லத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறதோ அதே பாணியில் தான் அதானி குழுமத்தையும் வெளியேற்றியிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷவை, சட்டரீதியாக அங்கிருந்து வெளியேறுமாறு கோருவது சிக்கலானது. அதனால் தான், அவ்வாறான ஒரு அதிகாரபூர்வ அறிவித்தலை மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசாங்கம் வழங்கவில்லை.

அவரை அங்கிருந்து வெளியேறிச் செல்லும் முடிவை எடுக்கும் வகையில், ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள், பொது மேடைகளில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். அந்தக் கருத்துக்கள் மிக கேவலமானவை – அநாகரீகமானவை. வெட்கம், மானம், ரோஷம் இருந்தால் வெளியே போ என்று கூறுகின்ற வகையில் அரசாங்கம் நடந்து கொள்கிறது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவோ, அதற்கு விட்டுக் கொடுக்கவில்லை. அவர் அரசாங்கத்துடன் மல்லுக்கட்ட தீர்மானித்து விட்டார். அதிகாரபூர்வ அறிவித்தலை கொடுத்தால் வெளியே போவேன் என்று கூறிக் கொண்டிருக்கிறார். அதே போல அதானி குழுமத்திற்கும் ஒரு குடைச்சலை கொடுத்தது அநுர குமார அரசாங்கம்.

அநுரகுமார திசாநாயக்க தனது முதலாவது இந்தியப் பயணத்தை மேற்கொண்டபோது, அதானி குழுமத்தின் திட்டங்களை முன்னெடுப்பதற்கு எந்த தடையும் இல்லை என வாக்குறுதி கொடுத்திருந்தார். ஆனால், அதானி குழுமம் இணங்கிய விலைக்கு, மின்சாரத்தை கொள்வனவு செய்ய முடியாது என திட்டவட்டமாக அவர் கூறியிருந்தார். இது ஒரு சிக்கலாக மாறியது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் அதானி கிறீன் நிறுவனம் நிறுவனம் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அமைய ஒரு அலகு மின்சாரத்தை 0.0826 அமெரிக்க டொலருக்கே, இலங்கை அரசாங்கம் வாங்க வேண்டும். ஆனால், இது அதிக பட்ச தொகை என்கிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

50 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உள்ளூர் நிறுவனம் ஒன்று, ஒரு அலகு மின்சாரத்தை 0.0465 அமெரிக்க டொலருக்கு வழங்குகின்ற போது ஏன் அதானி கிறீன் நிறுவனத்தினால் அவ்வாறு வழங்க முடியாது என கேள்வி எழுப்பியிருக்கிறார் ஜனாதிபதி. இந்த விலைக்கு இணங்கினால் திட்டத்தை தொடரலாம் என்ற ரீதியில் அரசாங்கம் சமிக்ஞை காட்ட, அதானி குழுமம் அதற்கு இணங்கவில்லை.

சிறிய முதலீட்டாளர்களுக்கு உற்பத்தி செலவு குறைவாக இருக்கும். பெரிய முதலீட்டாளர்களுக்கு அது மிக அதிகமாக இருக்கும். இதனால் உற்பத்திச் செலவும் விற்பனை விலையும் மாறுபடுவது இயல்பு. சாதாரணமாக, ஒரு வீட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரு பொருளை, மிகக் குறைந்த விலைக்கு விற்க முடியும். அங்கு மூலப் பொருளுக்கான செலவும், அதனை உற்பத்தி செய்பவருக்கான கூலியும், சிறிய இலாபமும் மாத்திரமே விற்பனை விலையை தீர்மானிக்கும்.

ஆனால் அதேபொருளை ஒரு பெரிய நிறுவனம் உற்பத்தி செய்கின்ற போது, மூலப்பொருள், கூலி போன்றவை தவிர இன்னும் ஏராளமான செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும். இடத்துக்கான வாடகை அல்லது குத்தகை, வரிகள், விநியோகம் என்று அந்தப் பொருளின் விற்பனை விலையின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதே போலத் தான், சிறியளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற உள்ளூர் உற்பத்தியாளர்கள், குறைந்த விலைக்கு மின்சாரத்தை கொடுக்க முன்வந்தாலும், சர்வதேச முதலீட்டாளர்களால் அந்தளவிற்கு கொடுக்கக் கூடிய நிலை இருக்காது.

அதற்காக, அதானி குழுமமும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் இணங்கிக் கொண்ட ஒரு மின்சார அலகிற்கான கொள்வனவு விலை நியாயமானது

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



என்று அர்த்தம் இல்லை. உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களின் உற்பத்தி செலவில் வேறுபாடுகள் இருக்கும் என்பது மறுக்க முடியாத விடயம். அதானி குழுமத்தின் திட்டத்தை முன்னெடுத்தால், அடுத்த 20 ஆண்டுகளில் 1.26 பில்லியன் டொலர்களை இலங்கை இழக்கும் நிலை ஏற்படும் என அரசாங்கம் கூறுகிறது. நிச்சயமாக இது ஒரு மிகப்பெரிய தொகை.

எனவே கொள்வனவு விலையை குறைத்தால், மின்சார கட்டணத்தை குறைக்க முடியும் என அரசாங்கம் கூறுகிறது. அதேவேளை, அதானி கிறீன் நிறுவனம் இந்த திட்டத்தை விட்டு வெளியேறுவதால் ஏற்படக் கூடிய பாதிப்புகளையும் குறைத்து மதிப்பிட முடியாது.

இதன் மூலமாக ஒரு பில்லியன் டொலர் அந்நிய முதலீடு இழக்கப்பட்டிருக்கிறது. உள்ளூர் நிறுவனங்களிடம் இந்த ஒப்பந்தத்தை கொடுத்தாலும், அவர்களால் இந்தளவு பாரிய திட்டத்தை முன்னெடுக்க முடியுமா என்பது சந்தேகம்.

அதனை உடனடியாக செய்ய முடியாது. நீண்டகாலம் இழுபட்டால், அது மின்சார விநியோக கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும். தேவைக்கு ஏற்ப மின்சாரத்தை விநியோகிக்க முடியாத நிலையை தோற்றுவிக்கும்.


உள்ளூர் முதலீட்டாளர்கள் இந்த திட்டத்தை முன்னெடுப்பதாக இருந்தாலும், அவர்கள் பெரியளவில் இறக்குமதிகளை செய்ய வேண்டி இருக்கும். அதற்காக அந்நிய செலாவணி கையிருப்பை கணிசமாக இழக்க வேண்டிய சூழல் அரசாங்கத்துக்கு ஏற்படும்.

அது தவிர, அதானி கிறீன் நிறுவனம் இந்த உடன்பாட்டில் இருந்து விலகிக் கொள்வது, இலங்கையில் பாதுகாப்பான முதலீடுகளைச் செய்யலாம் என்ற நம்பிக்கைகளை உடைத்திருக்கிறது. தற்போதைய அரசாங்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏற்புடைய ஒன்று அல்ல. அவர்கள் முதலீடு செய்வதற்கு சாதகமான இடம் இலங்கை அல்ல என்ற கருத்து சர்வதேச அளவில் ஏற்படப் போகிறது.

அதனை உடைப்பதற்கு, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் உள்ள ஒரே துருப்புச் சீட்டு சீனா. சீனாவைக் கொண்டு புதிய முதலீடுகளை அரசாங்கம் முன்னெடுக்க கூடும். அவ்வாறு முன்னெடுக்கின்ற போது அது பிராந்திய மற்றும் சர்வதேச அரசியலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். பூகோள அரசியல் போட்டியில், ஏற்கனவே சிக்கியுள்ள இலங்கையின் சீனாவிற்கு செங்கம்பளம் விரிக்கும் அணுகுமுறை இன்னமும் இலங்கையை பிரச்சினைகளுக்குள் சிக்க வைக்கும். ஆக, அதானியை விலக்கப் போய் பல்வேறு சிக்கல்களுக்குள், இலங்கை சிக்கிக் கொள்ளுகின்ற நிலை உருவாகும் போலவே தெரிகிறது.

# யூ.எஸ்.எயிட் உதவி இடை நிறுத்தமும் இலங்கையின் இரு ட்ரம்ப் விசிறிகளும்

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- வீ.தனபாலசிங்கம் -



மீண்டும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக கடந்த மாதம் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் தான் தோன்றித்தனமான நடவடிக்கைகளில் இறங்குவார் என்பது எதிர்பார்க்கப்பட்டதே. ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்ற மறுகணமே அவர் பிறப்பித்த உத்தரவுகள் தொடக்கம் கடந்த ஒரு மாத காலமாக அவரது நிருவாகத்தின் நடவடிக்கைகள் சர்வதேச கடப்பாடுகளில் இருந்து விலகுவதே அவரது வெளியுறவுக் கொள்கையின் தீர்க்கமான அம்சமாக இருக்கிறது என்பதை மீண்டும் தெளிவாக நிரூபித்து நிற்கின்றன.

உலக சுகாதார நிறுவனம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் சர்வதேச உடன்படிக்கை ஆகியவற்றில் இருந்து விலகியதை தொடர்ந்து அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகளை இடைநிறுத்துவதற்கும் ட்ரம்ப் நிருவாகம் தீர்மானித்தது.

அமெரிக்காவின் உலகளாவிய உதவிக்கான ஒரு கட்டமைப்பாக ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக செயற்பட்டு வந்திருக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் 'யூ .எஸ். எயிட்' (United States Agency for International Development – USAID) செயற்திறன் அற்றதாகவும் கோட்பாட்டு முரண்பாடுகளை கொண்டிருப்பதாகவும் ஒரு காரணத்தைக் கூறி ட்ரம்ப் நிருவாகம் வெளிநாட்டு உதவிகளை 90 நாட்களுக்கு முடக்கியிருக்கிறது. அந்த நிறுவனத்தை மூடி இராஜாங்கத் திணைக்களத்துடன் இணைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

அமெரிக்க அரசாங்கத்தின் நிறுவனங்கள் அமெரிக்காவின் உலக மேலாதிக்க மற்றும் மூலோபாய நலன்களை பேணிப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற போதிலும், உலகம் பூராவும் வாஷிங்டனின் மென் அதிகாரத்தை (Soft Power) மேம்படுத்தும் ஒரு முக்கிய கருவி என்று வர்ணிக்கப்பட்டு வந்த யூ .எஸ். எயிட் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் கோடிக்கணக்கான டொலர்கள் உதவிகளை நாடுகளுக்கும் அமைப்புகளுக்கும் வழங்கி வருகிறது. வெளிநாட்டு உதவிகளை முடக்கும் ட்ரம்ப் நிருவாகத்தின் தீர்மானத்தின் விளைவாக உயிர் வாழ்வுக்காக அமெரிக்க உதவியில் தங்கியிருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்படப் போகிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் செயற்திறன் திணைக்களத்தின் (Department of Government Efficiency) தலைவரான உலகின் பெரிய தனவந்தர் இலன் மஸ்க் யூ .எஸ். எயிட் நிறுவனம் அமெரிக்கவை வெறுக்கும் தீவிர வாத இடது மார்க்சியவாதிகளினதும் நம்பமுடியாத பயங்கரமான கும்பல்களினதும் கூடாரமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

எந்தவிதமான சான்றையும் முன்வைக்காமல் யூ .எஸ். எயிட்டை 'கிறிமினல் அமைப்பு ' என்று வர்ணித்த மஸ்க் 'அந்த நிறுவனம் சாவதற்கான நேரம் வந்து விட்டது' என்றும் கூறினார். அதேவேளை, ஜனாதிபதி ட்ரம்ப் யூ .எஸ்.எயிட் தீவிரவாத கிறுக்கர்கள் கும்பல் ஒன்றினால் நிருவகிக்கப்பட்டு வந்ததாகவும் அவர்களை தாங்கள் வெளியேற்றிக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி ட்ரம்ப் கூறினார்.

வெளிநாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்கு இது கால வரை அமெரிக்க நிருவாகங்கள் கடைப்பிடித்து வந்திருக்கும் கொள்கைகளும் நடைமுறைகளும் பல சந்தர்ப்பங்களில் அமெரிக்காவின் நலன்களுக்கும் விழுமியங்களுக்கும் முரணானவையாக அமைந்திருப்பதாக கருதும் ட்ரம்ப் அந்த உதவிகள் வெளிநாடுகளின் சிந்தனைகளை மேம்படுத்துவதற்கும் நாடுகளுக்குள்ளும் நாடுகள் மத்தியிலும் இணக்கப்போக்கான, உறுதிவாய்ந்த உறவுகள் பாதிக்கப்படுவதற்கும் வழிவகுத்திருப்பதாக கூறுகிறார். ட்ரம்ப் நிருவாகத்தின் இந்த தீர்மானங்களை உலக நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் கடுமையாக கண்டனம் செய்து வருகின்ற அதேவேளை, இலங்கையில் இரு அரசியல்வாதிகள் ஆதரித்து விசித்திரமான கருத்துக்களை வெளியிட்டு ட்ரம்பின் விசிறிகள் போன்று நடந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்சவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்சவுமே அவர்கள்.

இலங்கையில் யூ .எஸ். எயிட்டின் நிதியுதவிகள் குறித்து விசாரணை செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்த நாமல் ராஜபக்ச மற்றைய நாடுகளின் விவகாரங்களில் தலையீடு செய்யாத ட்ரம்பின் கொள்கையை பாராட்டியிருப்பதுடன் அமெரிக்க வரியிறுப்பாளர்களின் நிதி ஒதுக்கீடுகளில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த வாரம் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

வெளிநாடுகளில் அரசாங்கங்களுக்கு எதிராக கிளர்ச்சிகளை தூண்டிவிடும் நடவடிக்கைகளுக்கு யூ .எஸ். எயிட்டின் நிதி பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதாகவும் ட்ரம்ப் கூறியிருப்பது நாமல் ராஜபக்சவை கவர்ந்திருக்கிறது போன்று தெரிகிறது. தங்களது ஆட்சிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாட்டுச் சதி இருந்ததாக கூறும் ராஜபக்சாக்களுக்கு உலகம் வெறுக்கின்ற ட்ரம்ப் ஒரு 'சிறந்த அரசியல்ஞானியாக' தெரிவது விசித்திரம்.

அதேவேளை அமெரிக்காவை வெறித்தனமாக தாக்கிப் பேசுவதை வழக்கமாகக் கொண்ட விமல் வீரவன்சவும் யூ .எஸ். எயிட் நிறுவனத்தின் 'தவறான செயல்களை' ஜனாதிபதி ட்ரம்ப் அம்பலப்படுத்துவதாகக் கூறி அவரை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார். அவர் எக்ஸ் சமூக ஊடகத்தில் செய்திருக்கும் பதிவொன்றில் அமெரிக்க தனவந்தர் ஜோர்ஜ் சோரோஸ் ஊடாக வழங்கப்படும் யூ .எஸ். எயிட் நிதியுதவி இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் தோற்றுவித்த நெருக்கடிகளை அம்பலப்படுத்துகின்றமைக்காக அமெரிக்க ஜனாதிபதிக்கு நன்றி. குழப்ப நிலைகளுக்கு ஆதரவளிக்கின்ற தூதுவர்களையும் அம்பலப்படுத்துமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

டொனால்ட் ட்ரம்பை வெளிநாடுகளின் விவகாரங்களில் தலையீடுகளைச் செய்யாத வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பவராக ராஜபக்சவும் வீரவன்சவும் கண்டு பிடித்திருப்பது தான் இங்கு விசித்திரமான ஒரு விடயமாகும். டென்மார்க் நாட்டுக்கு சொந்தமான கிறீன்லாந்து தீவை அமெரிக்காவுக்கு சொந்தமாக்கப் போவதாகவும் மத்திய கிழக்கில் காசா பள்ளத்தாக்கில் இருந்து பாலஸ்தீன மக்களை வெளியேற்றிவிட்டு அந்த பள்ளத்தாக்கை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் போவதாகவும் கனடாவை அமெரிக்காவின் 51வது மாநிலமாக்குவதற்கு விரும்புவதாகவும் ட்ரம்ப் கூறியதை அறிந்த பின்னரும் கூட இந்த இரு இலங்கை அரசியல்வாதிகளும் ட்ரம்பை 'தலையீடு செய்யாத கொள்கைக்காக' பாராட்டுகிறார்கள் என்றால் அதை என்னவென்று சொல்வது?

ராஜபக்சவும் வீரவன்சவும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மீதான தங்களது வெறுப்பின் காரணமாகவே யூ .எஸ். எயிட் மீதான ட்ரம்ப் நிருவாகத்தின் தாக்குதலை ஆதரிக்கிறார்கள் என்று தெரிகிறது. மூன்று வருடங்களுக்கு முன்னர் ராஜபக்சாக்களின் ஆட்சியை வீழ்த்திய மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெறும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் செயற்பட்டதாக இவர்கள் ஏற்கெனவே குற்றஞ்சாட்டி வந்திருக்கிறார்கள். பல தொண்டர் நிறுவனங்களுக்கும் சிந்தனைக் குழாம்களுக்கும் (Think Tanks) எதிரான தங்களது தாக்குதலை மீண்டும் தீவிரப்படுத்துவதற்கு யூ .எஸ். எயிட்டுக்கு எதிராக ட்ரம்ப் நிருவாகம் நடவடிக்கையில் இறங்கியிருக்கும் இன்றைய சந்தர்ப்பத்தை இவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

வீரவன்சவை பொறுத்தவரை, உள்நாட்டுப்போர் காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் செய்த மனிதாபிமான உதவிகளைக் கூட பயங்கரவாதத்துக்கும் பிரிவினைவாதத்துக்கும் வழங்கப்படும் ஆதரவு என்று விமர்சித்தவர். இராணுவ ரீதியாக அன்றி அரசியல் ரீதியாக தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கத் தீர்வைக் காணவேண்டும் என்று குரல் கொடுத்த தொண்டர் நிறுவனங்களுக்கு எதிரான விசமத்தனமான பிரசாரங்களின் முன்னரங்கத்தில் வீரவன்ச போன்றவர்கள் நின்றார்கள்.

அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் எதிராக 'போர்க்கொடி' தூக்கியவர்கள் பெரும்பாலும் இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளில் குறைந்த பட்சமானவற்றைக் கூட ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாதவர்கள். இன்று இத்தகையவர்கள் நிறவெறியையும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான உணர்வுகளையும் கொண்ட ஒரு அமெரிக்க ஜனாதிபதியை பாராட்டுவதில் திருப்தி காண்கிறார்கள்.

அமெரிக்க மக்களின் வரிப்பணம் வெளிநாடுகளில் ஒதுக்கீடு செய்யப்படுவதில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நாமல் ராஜபக்ச தங்களது குடும்பத்தின் ஆட்சிக் காலத்தில் சொந்த நாட்டு மக்களின் வரிப்பணம் செலவிடப்பட்டதில் இருந்த வெளிப்படைத் தன்மையின் இலட்சணத்தை ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இவர்களுக்கும் ட்ரம்புக்கும் இடையே உணர்வுகள் ஒத்துப் போவதற்கு காரணம் 'மற்றவர்கள்' மீதான வெறுப்பேயாகும். குறுகிய மனப்பான்மை என்பது பெரும்பாலும் வெறுப்புணர்வில் இருந்தே வெளிக் கிளம்புகிறது. அமெரிக்காவில் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் குடியேற்றவாசிகளுக்கும் எதிரான வெறித்தனமான உணர்வைக் கொண்ட ஜனாதிபதி ட்ரம்பை, தங்களது அரசியல் மீட்சிக்கு இனவாதத்தில் மாத்திரம் நம்பிக்கை கொண்டிருக்கும் இவர்கள் கோட்பாட்டு அடிப்படையிலான தங்களது நேசசக்தியாக வரித்துக் கொள்வதில் காட்டும் நாட்டம் ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

யூ .எஸ். எயிட் உதவி நிறுத்தம் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை மிகவும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. அத்தகைய நிறுவனங்கள் சகலதுமே வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையாகவும் செயற்படுகின்றன என்று கூறமுடிய விட்டாலும், உண்மையில் சமூகங்களின் நலன்களுக்காக பயனுறுதியுடைய செயற்திட்டங்களை முன்னெடுக்கும் நிறுவனங்கள் பாதிக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளரான கலாநிதி ஜெகான் பெரேரா கடந்த வாரம் 'முற்றுகைக்குள்ளாகியிருக்கும் யூ .எஸ். எயிட்டும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பட்டினிக் கொடுமை மற்றும் போர்ச் சூழல்களில் மக்களின் இடர்பாடுகளைத் தணிப்பதில் அமெரிக்க உதவி முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை வகிக்கும் உலகின் பிராந்தியங்களில் பெரும் எண்ணிக்கையான மக்களின் உயிர்வாழ்வு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது என்கின்ற அதேவேளை, யூ .எஸ். எயிட் உதவி நிறுத்தம் இலங்கையில் முற்றிலும் வேறுபட்ட காரணத்துக்காக செய்திகளில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையிலும் உலகம் பூராவும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்களுக்கு இதுகாலவரையில் மிகவும் பெரியளவில் நிதியுதவியைச் செய்த (22ம் பக்கம் பார்க்க)

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2




## மணமகள்

**ID08121182 (F)**
27yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08121175 (F)**
35yrs, 5' , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08121174 (F)**
34yrs, 5'2" , Single , Aswini , 9 Sevai , Bachelors.. , Work , Sri Lanka

**ID08121169 (F)**
26yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. Executive.. , Sri Lanka

**ID08121167 (F)**
46yrs, 5'4" , Divorced , Not Specified , N/A Sevai , High School , House Wife , Sri Lanka

**ID08121165 (F)**
34yrs, 5'2" , Single , Kettai , 6 Sevai , Masters Degree , Researcher , Canada

**ID08121164 (F)**
26yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , Sri Lanka

**ID08121159 (F)**
25yrs, 5'4" , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08121156 (F)**
29yrs, 5'10" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Senior Consultant.. , Canada

**ID08121154 (F)**
26yrs, 5'3" , Single , Thiruvaathirai , 8 Sevai , Diploma , Nurse , Canada

**ID08121153 (F)**
27yrs, 5'5" , Single , Uthiram , 11 Sevai , Bachelors.. , Tba , United Kingdom

**ID08121152 (F)**
33yrs, 5'6" , Single , Punarpoosam , 12 Sevai , Ph.D , Doctor , United States

**ID08121151 (F)**
27yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Jewel Shop , Canada

**ID08121149 (F)**
28yrs, 5'4" , Single , Chithirai , 3 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08121145 (F)**
33yrs, 5'6" , Divorced , , Sevai , Bachelors.. , Businesswoman , Netherlands

**ID08121131 (F)**
35yrs, 5'4" , Single , Chithirai , N/A Sevai , Bachelors.. , Project Coordinator , Canada

**ID08121130 (F)**
33yrs, 5'7" , Single , Punarpoosam , 5 Sevai , Bachelors.. , Data , Canada

**ID08121125 (F)**
26yrs, 5'3" , Single , Punarpoosam , 1 Seva , High School , Admin Clerk.. , Canada

**ID08121122 (F)**
33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada

**ID08121119 (F)**
46yrs, 5'5" , Single , Uthiraadam , 10 Sevai , Bachelors.. , Law Clerk , Canada

**ID08121116 (F)**
30yrs, 5'4" , Divorced , , Sevai , Masters Degree , , India

**ID08121100 (F)**
26yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Account , Sri Lanka

**ID08120721 (F)**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 (F)**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08121099 (F)**
21yrs, 5'4" , Single , Pooram , 4 Sevai , High School , Cashier , Canada

**ID08120695 (F)**
28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08121095 (F)**
30yrs, 5'4" , Divorced , , Sevai , Bachelors.. , Business , India

**ID08121115 (F)**
24yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Accounting , Canada

**ID08121111 (F)**
37yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121110 (F)**
33yrs, 5'3" , Single , Moolam , 12 Sevai , Masters Degree , Doctor , Canada

## மணமகன்



**ID08121183 (M)**
36yrs, 5'10" , Single , Anusham , 5 Sevai , Diploma , Business , Sri Lanka

**ID08121181 (M)**
35yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , TTC , Canada

**ID08121180 (M)**
49yrs, 5'6" , Single , Aswini , 9 Sevai , Masters Degree , Engineer , Sri Lanka

**ID08121178 (M)**
30yrs, 6'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Software engineering , Sri Lanka

**ID08121176 (M)**
28yrs, 5'6" , Single , Moolam , 7 Sevai , Postgraduate.. , Television.. , Sri Lanka

**ID08121171 (M)**
26yrs, 6' , Single , Swaathi , N/A Sevai , Bachelors.. , Engineer , Canada

**ID08121168 (M)**
42yrs, 5'10" , Divorced , Punarpoosam , N/A Sevai , Diploma , Own Company , Canada

**ID08121155 (M)**
28yrs, 5'8" , Single , Thiruvaathirai , 6 Sevai , High School , Resturent , Canada

**ID08121146 (M)**
41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada

**ID08121146 (M)**
41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada

**ID08121146 (M)**
41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada

**ID08121144 (M)**
29yrs, 6' , Single , Poorattathi , Sevai , Ph.D , Researcher , United States

**ID08121143 (M)**
27yrs, 5'6" , Single , Poosam , N/A Sevai , Masters Degree , IT Specialist , Canada

**ID08121142 (M)**
32yrs, 5'4" , Single , Kettai , 3 Sevai , High School , Printers , Sri Lanka

**ID08121140 (M)**
38yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Electrical.. , Canada

**ID08121136 (M)**
41yrs, 5'7" , Single , Rohini , N/A Sevai , Diploma , Accountant , Sri Lanka

**ID01211348 (M)**
29yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , Bachelors.. , Marketing , Canada

**ID08121127 (M)**
28yrs, 5'5" , Single , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Tims , Canada

**ID08121120 (M)**
32yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , Diploma , Tourisum , Sri Lanka

**ID08121118 (M)**
35yrs, 5'8" , Single , Thiruvonam , 10 Sevai , Masters Degree , Manager Reporting.. , Canada

**ID08121101 (M)**
36yrs, 5'7" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08121092 (M)**
31yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08120734 (M)**
36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka

**ID08120733 (M)**
27yrs, 5'7" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States

**ID08121090 (M)**
39yrs, 5'7" , Divorced , Poosam , N/A Sevai , High School , Ware house.. , Canada

**ID08120730 (M)**
29yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering , Sri Lanka

**ID08121088 (M)**
35yrs, 5'9" , Single , Pooram , 1 Sevai , Postgraduate.. , Marketing.. , Sri Lanka

**ID08121105 (M)**
34yrs, 5'6" , Single , Uthiraadam , N/A Seva , Masters Degree , Engineer , Canada

**ID08121104 (M)**
35yrs, 6'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Lawyer , Canada

**ID08121103 (M)**
34yrs, 5'11" , Single , Aayilyam , 11 Sevai , Postgraduate.. , Asst Manager , Canada

# வடக்கில் சுற்றுலா விருத்தியில் அரசாங்கம் அக்கறை காட்டுமா?

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



யுத்தத்தினால் அழிந்து சிதிலமடைந்திருக்கின்ற வடக்குப் பிரதேசங்களை அபிவிருத்தியினால் மேம்படுத்துவதும் அங்குள்ள மக்களை உளரீதியில் புது நிலைப்படுத்துவதும் ஒன்றாக நடக்க வேண்டும். யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் கடந்த பிறகும் இவை சரியாக நடக்கவேயில்லை.

2013 — 2018 வரை ஐந்து ஆண்டுகள் வடக்கு மாகாணசபை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இருந்தது. அப்போதும் வடக்கின் அபிவிருத்தியைப் பற்றியும் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் நிலையைப் பற்றியும் பொறுப்பானவர்கள், பொறுப்பாகச் சிந்திக்கவில்லை. இதனால்தான் இன்னும் இங்கே ஏகப்பட்ட பிரச்சினைகள்.

புதிய (NPP) அரசாங்கம் எல்லாவற்றிலும் மாற்றங்களையும் புதுமைகளையும் செய்ய முயற்சிக்கிறது. என்பதால், வடக்கின் நிலைமைகளிலும் நியானமான அவசியமான மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. அதைச் செய்ய வேண்டிய கடப்பாடு, மாற்றங்களை வலியுறுத்தும் அரசாங்கத்துக்கு உண்டு. அதை ஓரளவு உணர்ந்திருக்கிறபடியால் தான் வடக்கின் அபிவிருத்திக்கென 5000 பில்லியன் ரூபாயை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. வட பிராந்தியத்திற் சில சிறப்புத் திட்டங்களை விருத்தி செய்வதற்கும் முயற்சிக்கிறது.

வடக்கின் அபிவிருத்தியில் முக்கியமான ஒன்று, சுற்றுலாத்துறையை வளர்ப்பதாகும். சுற்றுலாத்துறையை மேம்படுத்திக் கொள்வதன் மூலமாக பிரதேச அபிவிருத்தியைச் செய்ய முடியும். பொருளாதார ரீதியிலும் வளர்ச்சியை உருவாக்கலாம். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இது உதுவும். ஒரே கல்லில் மூன்று காய்கள். பொதுவாகச் சுற்றுலாத் துறையில் பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றில் வளர்ச்சி ஏற்படுவதுண்டு. மக்களுக்கான தொழில் வாய்ப்புகளும் பெருகும். ஆகவே அரசாங்கம் வடக்கில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதைப் பற்றிக் கவனத்திற் கொள்ள வேண்டும். அதற்கான வளங்களும் வாய்ப்புகளும் வடக்கிற் தாராளமாகவே உண்டு.

1.இயற்றை வளங்களோடு இணைந்திருக்கும் சுற்றுலா மையங்களை அடையாளம் கண்டு, அவற்றை வளப்படுத்தி, சுற்றுலாவுக்கேற்ற மாதிரி வடிவமைப்பது. இதற்கு பூநகரி கௌதாரிமுனை மணல்மேடுகள், கௌதாரிமுனைக் கடற்கரை (Beach), வேலணைக் கடற்கரை, நெடுந்தீவு, இயக்கச்சி சுண்டிக்குளம் ஆனையிறவுக் கடனீரேரி பறவைகள் சரணாலயம் (Nature Park) மன்னார் கடற்கரைகள், முல்லைத்தீவு நாயாற்றுக் கடற்கரை, இரணைமடுக்குளம், வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயம், காரைநகர்க் கடற்கரை (Casuarina Beach) போன்றவை உண்டு. இதை விட வேறு மையங்களையும் அடையாளம் காண முடியும். இவை ஏறக்குறைய மாலைதீவு, கியூபா போன்ற நாடுகளில் உள்ள சுற்றுலாவுக்கு நிகரானவையாக இருக்கும். இயற்கையோடிணைந்த உணவு முறைகளையும் இங்கே சேர்த்துக் கொள்வதாக இருக்கும்.

2.பண்பாட்டுச் சுற்றுலா (Cultural tourism)வுக்குரிய இடங்களை விருத்தி செய்வது. இது குறித்த பிராந்தியத்தின் பண்பாட்டு அடையாளங்கள், சொத்துகளின் மீது கவனத்தைக் குவிக்கும் வகையிலானது. இதற்கு நல்லூர், சந்நிதி, நயினாதீவு, கீரிமலை, மாவிட்டபுரம், மடு, திருக்கேதீஸ்வரம், புல்லாவெளி, பொன்னாலை, கந்தரோடை போன்ற இடங்களிலுள்ள வரலாற்றுச் சிறப்புடைய ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் பௌத்த சின்னங்கள் போன்றவற்றின் முக்கியத்துவத்தை மையப்படுத்தி அமைப்பதைப் பற்றிச் சிந்திக்கலாம்.



கூடவே இதற்குத் தோதாக வடக்கின் கலை வெளிப்பாடுகளைக் (கூத்து, நாடகம், நடனம், ஓவியக் கூடம்) காணக் கூடியவாறு செய்ய வேண்டும். கேரளாவின் கதகளி, கண்டிய நடனம் போன்றவை உதாரணம். இந்தச் சுற்றுலாவில் பண்பாட்டைத் தேடி அறிய விரும்புவோரும் ஆன்மீக யாத்திரிகர்களும் அதையொட்டிய சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக வரக்கூடும்.

3.காலனிய கட்டிடங்கள் மற்றும் அதையொட்டிய மரபுரிமைகளை மையப் படுத்திய சுற்றுலா. (Colonial architectural heritage tourism). இதற்கு ஏற்கனவே உள்ள யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறைக் கோட்டை, மன்னார்க் கோட்டை, நெடுந்தீவில் உள்ள புராதன கட்டிடங்கள், யாழ்ப்பாணம் பழைய கச்சேரி, சங்கானைத் தேவாலயம் மற்றும் மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, மன்னார் அரிப்பு அல்லிராணி மாளிகை போன்ற புராதன சின்னங்களை மையப் படுத்த வேண்டும். அவற்றின் சூழலைச் சுற்றுலாவுக்குரியவாறு மாற்றியமைக்க வேண்டும். மேலும் பூநகரி, இயக்கச்சி, ஆனையிறவு, வெற்றிலைக் கேணி, பருத்தித்துறை போன்ற இடங்களில் உள்ள காலனித்துவ காலக் கோட்டைகள், வெளிச்ச வீடுகள் யுத்தத்தினால் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றையும் மீளமைப்புச் செய்தால், அவையும் இந்த வகைச் சுற்றுலாவுக்கு பெரிதும் உதவும். இதற்கு ஹொலண்ட் அரசுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரலாம். அல்லது அந்த நாட்டின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

4. இதற்கு அப்பால் புதிதாக சுற்றுலா மையங்களை உருவாக்குவது. உதாரணமாக, வடமராட்சியில் முள்ளிக்குளம் மருதங்கேணிக்கும் இடையிலுள்ள களப்பை அகழ்ந்து படகுச் சவாரிகளை உருவாக்குவது. இதற்காக வெளிநாட்டுக் கடனைப் பெற்றாலும் அது பயனுடையதே.

ஏனென்றால் அது செலவீனத்தை விடப் பன்மடங்கு வருவாயை ஈட்டித் தரக் கூடியது. அந்தக் களப்பு இயற்கை வளம் நிறைந்த அழகான சூழலில் அமைந்துள்ளது. பசுமைச் சுற்றுலாவாக இதை உருவாக்கலாம். அருகே வங்காள விரிகுடாவுடன் இணைந்த இந்து சமுத்திரமுண்டு. அதனுடைய கரை அழகான கடற்கரையகும். இங்கே கடலுணவும் கடற்கரைக் காட்சியும் மேலதிக வாய்ப்பாக உள்ளன.

இதைப்போல இன்னோரிடம், நெடுந்தீவு உட்பட அனலைதீவு, எழுவைதீவு, கௌதாரிமுனை போன்ற இடங்களுக்கான படகுச் சவாரிகளை உருவாக்குவது. இந்த இடங்கள் மிக அழகானவை. அங்கே சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகளையும் கலை மற்றும் விற்பனைப் பொருட்களையும் உருவாக்கினால் போதும். அந்த இடங்களும் அபிவிருத்தியடையும்.

5.வடக்கின் பிரத்தியேகமான அறிவுத் துறை, தொழிற்துறை சார்ந்த இடங்களை விருத்தி செய்தல். இவையும் ஒரு தொகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடியவையே. இவ்வாறு வடக்கின் சுற்றுலாவை பல வகையில் விருத்தி செய்யலாம் செய்ய வேண்டும். இலங்கையின் பிரதான வருவாயில் ஒன்று சுற்றுலாத்துறையாகும். அதற்கு வடக்கு மாகாணமும் தாராளமாகப் பங்களிக்க முடியும். சம நேரத்தில் வடக்கில் பல்லாயிரக்கணக்கானோர் சுற்றுலாவுடன் தொடர்புடைய பல்வேறு தொழில் வாய்ப்புகளைப் பெறக் கூடியதாகவும் இருக்கும்.



ஆனால், புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் வடக்கின் சுற்றுலாத் துறைக்கென சிறப்பான நிதி ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை. அது குறித்த சிரத்தையைக் காணவும் முடியவில்லை. இது புதிய அரசாங்கத்தின் முதலாவது பாதீடு என்பதால், அடுத்த ஆண்டுகளில் இதைக் குறித்த அக்கறைகள் மேலெழுக் கூடும். அதைக்குறித்த சிந்தனை இருக்குமானால், எதிர்காலத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யக் கூடியதாக இருக்கும்.

வடக்கு மாகாணசபையில் சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பாக இருப்போருக்கு இதைப் பற்றிய புரிதலோ கற்பனையோ போதாது. அவர்கள் வழமையான பாரம்பரியமான சில இடங்களை (மையங்களை)யே அடையாளப்படுத்தி வைத்துள்ளனர். அந்த இடங்கள் பலரும் பார்த்துப் பழகியவை என்பதை விட அனைவரையும் கவரக் கூடியவையும் அல்ல. புதிய இடங்களைத் தேடிக் காணும் முயற்சியோ, அவற்றைச் சுற்றுலாத்துறைக்கு ஏற்ற மாதிரி மேம்படுத்தக் கூடிய அக்கறையோ இல்லை. கேட்டால், தமக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை என்று ஒற்றை வரியில் தமது பொறுப்பை முடித்துக் கொள்கிறார்கள். இந்த விமர்சனம் அவர்களைக் குற்றம் சாட்டுவதற்கானதல்ல. பதிலாக அவர்களுடைய பொறுப்பை உணர வைப்பதற்கும் அவர்களை முயற்சிக்குமாறு தூண்டுவதற்குமானதாகும்.

சுற்றுலாத்துறையின் அடிப்படைகளில் ஒன்று, கொண்டாட்டத்தையும் அறிவு ஊட்டலையும் வியப்பையும் சமனிலையில் அளிப்பதாகும். அதுவே தீராத கவர்ச்சியையும் தாகத்தையும் உண்டாக்குவது. பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுவதாக இருத்தல். எண்ணும் தோறும் வியப்பூட்டுவது. பார்க்க முன்பும் பார்த்த பின்பும் தேடலுக்கு உரியதாக இருத்தல். இவை இருந்தால் தான் பலரையும் கவர முடியும். இவையில்லாத சுற்றுலா மையங்கள் விரைவில் சலிப்படைய வைத்து விடும்.

ஆகவே சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய வகையில் சுற்றுலா மையங்களின் சூழலையும் அவற்றின் வரலாற்றுச் சிறப்புகளையும் புத்துணர்வாக்கம் செய்து கொண்டேயிருக்க வேண்டும். புதிய மையங்களை அறிமுகப்படுத்த வேண்டும். எப்போதும் பளபளப்பாக இருக்கக் கூடியவாறு நாம் சில பொருட்களையோ பாத்திரங்களையோ மினுக்கி, நேர்த்தியாக அடுக்கி வைப்பதில்லையா? அதைப் போல இந்தச் சுற்றுலா மையங்களை மினுக்கிக் கொண்டேயிருக்க வேண்டும்.

உலகம் விந்தைகளால் நிரம்பியுள்ளது. இயற்கையாகவும் செயற்கையாகவும் இந்த விந்தை உள்ளது. அவற்றைப் பார்ப்பதற்கும் ரசிப்பதற்கும் என்று மக்கள் பெருந்தொகை பணத்தைச் செலவழித்துப் பயணம் செய்கிறார்கள். கூடவே தங்களுடைய நேரத்தையும் செலவிடுகிறார்கள். அப்படிச் செல்வோரை நாமும் கவர்ந்திழுக்க வேண்டும் என்றால் அதற்கான ஈர்ப்பை உண்டாக்கக் கூடிய சுற்றுலாப்புள்ளிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். மட்டுமல்ல, இதொரு உலகளாவிய போட்டி என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகில் பல நாடுகள் சுற்றுலாப் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவற்றுடன் நாம் போட்டியிட வேண்டியுள்ளது. எனவே இதற்கமைய எங்களையும் எங்களுடைய சுற்றுலா மையங்களையும் மேம்படுத்தி வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

வடக்கில் சில சுற்றுலா மையங்கள் இயல்பாக, இயற்கையாக இருக்கின்றன. அவற்றை மேலும் விரிவாக்கிப் புதுக்குவது அவசியம். குறிப்பாக பூநகரி கௌதாரிமுனையில் உள்ள Beachசும் இயக்கச்சி சுண்டிக்குளம் ஆனையிறவுக் கடனீரேரியில் உள்ள பறவைகள் சரணாலயம் மற்றும் Nature Parkக்கும். போக்குவரத்துக்கு வாய்ப்பாக வீதிகளைப் புனரமைத்து, தங்குமிடம், உணவு போன்ற அடிப்படை வசதிகளோடு இவற்றை சற்று வளமாக்கினால், மிகச் சிறப்பான சுற்றுலா மையங்களாக மிளிரும்.

கௌதாரிமுனை Beach ஆழம் குறைந்த கடலைக் கொண்டது. மிக நீண்டடீநயஉா. சுற்றயல், மணல் மேடுகளும் தாழும் புதர்களும் நிறைந்த அழகான இயற்கை அரண். நீராடுவதற்கும் நீந்திக் களிப்பதற்கும் அருமையான இடம். இதை இப்பொழுது படையினரே (22ம் பக்கம் பார்க்க)

# “சமாதானம்” என்பதன் அர்த்தம் உக்ரேன் சரணடைவதல்ல வெள்ளை மாளிகையில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தெரிவிப்பு



சமாதானம் என்பதன் அர்த்தம் உக்ரைன் சரணடைவதல்ல என பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதியுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார். உக்ரைனின் பாதுகாப்பு குறித்த உத்தரவாதங்கள் அவசியம் எனவும் பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நானோ அல்லது அமெரிக்க ஜனாதிபதியோ பலவீனமான சமாதானத்தை விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ள அவர் அமெரிக்காவும் அதன் ஜனாதிபதியும் பிரான்சின் சிறந்த நண்பர்கள் என தெரிவித்துள்ளார்.

உக்ரைனை பாதுகாக்கும் விடயத்தில் ஐரோப்பா தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது என தெரிவித்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி உக்ரைனின் பாதுகாப்பில் ஐரோப்பா 128 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது ஏனென்றால் ஐரோப்பாவின் கூட்டு பாதுகாப்பின் முன்னணியில் உக்ரைன் உள்ளது என தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மக்களின் பெரும் துணிச்சலை நான் போற்றுகின்றேன் பாராட்டுகின்றேன் என தெரிவித்துள்ள அவர் வலிமை மிக்கவர்களின் விருப்பத்தை திணிக்க கூடிய சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மீறக்கூடிய உலகில் வாழ்வதற்கு எவரும் விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அதில் ஐரோப்பிய நாடுகள் பணத்தை உக்ரைனுக்கு கடனாக வழங்குகிறார்கள். அத்துடன் அந்த பணத்தை அவர்கள் திரும்பவும் பெறுகிறார்கள் என தெரிவித்தார்.

உடனே குறுக்கிட்ட பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், அப்படி இல்லை, சரியாக சொல்வதென்றால் நாங்கள் மொத்த முயற்சியில் 60வீ செலுத்தினோம். என்று குறிப்பிட்டார்.

மேலும் உக்ரைனுக்கு வழங்கப்படும் நிதியின் விவரங்களையும் அவர் விளக்கினார்.

இறுதியில் டிரம்ப் ஏப்படி இருந்தாலும் அவர்கள் பணத்தை திரும்ப பெறுகிறார்கள், தற்போது நாமும் அதை செய்கிறோம் என்று தெரிவித்தார்.

இதேவேளை உக்ரைன் மீது ரஸ்யா போரை ஆரம்பித்து மூன்று வருடங்களாவதை குறிக்கும் விதத்தில் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ள அதேவேளை இந்த தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பின் போது அமெரிக்கா ரஸ்யாவிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.

உக்ரைனின் ஆள்புல ஒருமைப்பாட்டை ரஸ்யா மீறியுள்ளதை கண்டிக்கும் விதத்தில் ஐக்கியநாடுகள் பொதுச்சபை கொண்டு வந்த தீர்மானத்திற்கு ரஸ்யாவுடன் அமெரிக்காவும் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இந்த தீர்மானத்தை பொதுச்சபை நிறைவேற்றியுள்ளது.

இதன் பின்னர் உக்ரைன் மோதலிற்கு முடிவை காண வேண்டும் என தெரிவிக்கும் ஆனால் ரஸ்யாவை கண்டிக்காத ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கு ரஸ்யாவும் அமெரிக்காவும் ஆதரவளித்துள்ளன.

பாதுகாப்பு சபையின் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை அமெரிக்காவின் இரண்டு நெருங்கிய சகாக்களான பிரிட்டனும் பிரான்சும் புறக்கணித்தமை குறிப்பிடத்தக்கது.

# உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ள போதிலும் பரிசுத்த பாப்பரசர் காசாவில் உள்ள கத்தோலிக்க திருச்சபையுடன் நாளாந்தம் தொலைபேசி உரையாடல்களை மேற்கொள்கின்றார் -வத்திக்கான்



அவர் நிமோனியாவினால் பாதிக்கப்பட்டு உயிராபத்தை எதிர் கொண்டுள்ளார். ஆனால் காசா யுத்தம் ஆரம்பமான வேளை அவர் ஆரம்பித்த பாரம்பரியத்தை இன்றும் தொடர்கின்றார். அதாவது காசாவில் உள்ள ஒரேயொரு கத்தோலிக்க திருச்சபையுடன் இரவில் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதே அந்த செயற்பாடு. அவர் அந்த திருச்சபைக்கு ஆதரவையும் பிரார்த்தனைகளையும் வழங்குவார்.

தற்போது உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள பாப்பரசர் ரோமின் ஜெமெலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கத்தோலிக்க பாலஸ்தீனியர்கள் பாப்பரசருக்காக பிரார்த்தனை செய்கின்றனர். காசாவில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்களும் உறுப்பினர்களும் பாப்பரசர் விரைவில் குணமடைய வேண்டும் என பிரார்த்தனை செய்கின்றனர்.

பாப்பரசர் விரைவில் குணமடைய வேண்டும் என்ற பிரார்த்தனைக்காக நாங்கள் ஒன்றிணைவோம் என காசாவில் உள்ள கிறிஸ்தவ திருச்சபையின் மதகுருயூசுவ் அசாத் முகநூலில் பதிவு செய்தார்.

88வயது பாப்பரசர் குணமடைய வேண்டும் என அவர் பிரார்த்தனை செய்தார். பாப்பரசர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் அவர் பாப்பரசருக்காக பிரார்த்தனை செய்கின்றார்.

பாப்பரசா பிரான்சிஸின் உடல்நிலை குறித்த செய்தி காசாவின் அந்த சிறிய சமூகத்தை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. காசா யுத்தம் ஆரம்பமானது முதல் பாப்பரசருக்கும், பாலஸ்தீன கிறிஸ்தவ திருச்சபைக்கும் இடையிலான ஆழமான உறவை சுட்டிக்காட்டி நாளாந்தம் அவர்கள் பாப்பரசருக்காக பிரார்த்தனை செய்கின்றனர்.

2023 ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் தனது நடவடிக்கையை ஆரம்பித்து இரண்டுநாட்களின் பின்னர் பரிசுத்த பாப்பரசர் காசாவில் உள்ள கிறிஸ்தவ மத குருக்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டார் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் அவர்களை தொடர்பு கொண்டார் என வத்திக்கான் தெரிவித்துள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் சுவாசப்பை நிமோனியாவினால் பாதிக்கப்பட்டதால் காசாவில் உள்ள கிறிஸ்தவ திருச்சபையுடன் முன்னர் போல அவரால் தொடர்புகொள்ள முடியுமா என்ற சந்தேகம் காணப்பட்டது.

பாப்பரசர் ஆபத்தான நிலையில் உள்ள போதிலும் அவரது உடல் நிலையில் சிறிய முன்னேற்றம் தென்பட்டது.அவர் மருத்துவமனை படுக்கையிலிருந்தவாறு தனது பணிகளை மேற் கொண்டார் என தெரிவித்துள்ள வத்திக்கான் காசாவில் உள்ள திருச்சபையின் போதகரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அவர் ஒரு தந்தை போல தனது நெருக்கத்தை வெளிப்படுத்தினார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தொடர்ந்தும் ஆபத்தான நிலையிலேயே உள்ளார் என தெரிவித்துள்ள வத்திக்கான் குருதி பரிசோதனைகளின் போது அவரது சிறுநீரகம் செயல் இழந்திருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இரு வார காலத்திற்கு முன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பாப்பரசர் மேலும் சுவாச பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளார் என்பதற்கான அறிகுறிகள் இல்லை என தெரிவித்துள்ள வத்திக்கான் ஆரம்பகட்ட குருதி பரிசோதனைகளில் சிறுநீரக செயல் இழப்பிற்கான அறிகுறிகள் தென்பட்டன எனினும் தற்போது அது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என குறிப்பிட்டுள்ளது.

**07 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை அச்சுப் பத்திரிகையாக அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.**

# மாவையும் அம்பாறையும்

– த.கோபாலகிருஷ்ணன் –

மாவையும் மட்டக்களப்பும் எனும் மகுடத்தின் கீழ் அழகு.குணசீலன் அண்மையில் (இக்கட்டுரை 07 பெப் 2025 ஈழநாடு பத்திரிகை பழரசுரித்தி ருந்தது) சில விடயங்களைப் பதி விட்டிருந்தார். அதனைப் படித்ததன் விளைவே 'மாவையும் அம்பாறை மாவட்டமும்' என்ற தலைப்பிலான எனது இக்கட்டுரையாகும்.

அழகுகுணசீலன் தனது கட்டுரையில் மாவை சேனாதிராஜாவுக்கு மட்டக் களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட ங்களுடன் வடக்கின் ஏனைய அரசியல் தலைவர்களை விடவும் உறவும் ஊடாட்டமும் இருந்தன என்கின்ற விடயத்தைப் பதிவு செய்து அம்பாறை மாவட்டத்தில் மாவை சேனாதிராஜா வுக்கு இருந்த அரசியல் உறவில் அம்பாறை மாவட்டத்தமிழர் மகாசங்க த்தின் பெயரையும் ஏனையோரின் பெயர்களுடன் எனது பெயரையும் (செங்கதிரோன் கோபாலகிருஸ்ணன்) சேர்த்துக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டு ரையை நான் எழுதுவதற்கு இதுவும் இரட்டிப்புக் காரணமாகும்.

மாவை சேனாதிராஜாவுக்கும் எனக்கு மிடையிலான அரசியல் உறவும் ஊடா ட்டமும் சுமார் அரைநூற்றாண்டு காலத்தை உடையதாகும்.

1972 ஆம் ஆண்டு பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்க காலத்தில் நிறைவேற்றப்பட்ட இலங் கைக்கான குடியரசு அரசியலமைப் பைத் தொடர்ந்து அந்த அரசியல மைப்பைத் தமிழர்களின் மரணசாசனம் என வர்ணித்த தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக தலைவர் எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் (தந்தை செல்வா) அவர்கள், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யில் தனது காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்ற ஆசனத்தை இராஜினமாச் செய்து இடைத்தேர்த லில் தான் மீண்டும் வெற்றிப் பெற்றால் 1972 குடியரசு அரசியலமைப்பைத் தமிழர்கள் ஏற்கவில்லையென்றும் அரசாங்கக்கட்சி வெற்றி பெற்றால் தமிழர்கள் அதனை ஏற்றுக்கொண்டு ள்ளார்கள் என்றும் எடுத்துக்காட்டும் எனச் சவால்விட்டு ஓர் அரசியல் நெரு க்கடியை அரசாங்கத்திற்கு உருவாக்கி னார்.

அவ்வாறு தனது பாராளுமன்ற ஆசன த்தைத் தாமாகவே துறந்த தந்தை செல்வா வடக்குகிழக்கு மாகாணம் முழுவதும் வலம் வந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அவரை வரவேற்று அம்பாறை மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லக் கல்முனையிலிருந்து எனது வயதை யொத்த பல நண்பர்களுடன் இணை ந்து சைக்கிளில் ஊர்வலமாக மட்டக் களப்பு மாவட்டத்திலுள்ள களுவாஞ்சி க்குடி வரை வந்தோம்.

அப்போது நான் கல்முனை நீர்ப் பாசனத் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். எனது சொந்த மாவட்டமான அம் பாறையில் அமைந்த காரைதீவில் பிறந்து, பொத்துவிலில் வளர்ந்த நான் அரசாங்க ஊழியனாகக் கல்முனையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

நானும் நண்பர்களும் களுவாஞ்சிக் குடியை அடைந்ததே பாது தந்தை செல்வா வந்த ஊர்வலம் இராசமாணிக் கம் அவர்களின் வீட்டடியில் தரித்தி ருந்தது. சனக்கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. மக்கள் உற்சாகத் திலும் உணர்ச்சி மேலீட்டினாலும் தந்தை செல்வாவை நெருங்குவதற் காகத் துடித்துக் கொண்டிருந்தனர். அவ்வாறு முண்டியடிக்கும் கூட்டம் முதியவரான தந்தை செல்வா மீது தவறி விழுந்து மோதிவிடக் கூடா தென்பதற்காக ஏனைய நண்பர்களுடன் சேர்ந்து கைகளைச் சங்கிலிபோல் கோர்த்துக் கொண்டு தந்தை செல்வாவை வட்டவடிவமாகச் சுற்றி நின்று பாதுகாப்பு வளையமொன்றை ஏற்படுத்தினோம். அவ்வாறு அப்போது எம்முடன் இணைந்து கொண்டவர் களுள் செட்டிபாளையத்தைச் சேர்ந்த இலட்சுமிசுந்தரமும் ஒருவர். இவர் வந்தாறுமூலை மத்திய மகா வித்தி யாலயத்தில் எனது வகுப்பறை



நண்பன். (பின்னாளில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபராக விளங்கியவர்).

இலட்சுமிசுந்தரம் தான் என்னை அந்த இடத்தில் வைத்து மாவை சேனாதி ராஜாவுக்கு முதன்முதலாக அறிமுகம் செய்து வைத்தார். அப்போது எனக்கு வயது இருபத்தியிரண்டு. தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவும் தீவிர தொண்டனாகவும் நான் இயங்கிக் கொண்டிருந்த காலம் (பதினெட்டு வயதிலேயே நான் தமிழரசுக்கட்சியின் உறுப்பினராகி விட்டிருந்தேன்). அந்த அறிமுகத்திற்குப் பின் மாவைசேனாதி ராஜாவுடனான எனது அரசியல் உறவும் ஊடாட்டமும் அதிகரிக்கத் தொடங்கின.

அதன்பின் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கும் நோக்கத்துடன் அவர் தனியாகவோ அல்லது அமிர்தலிங்கம் ஆட்களுடனோ அம்பாறை மாவட்டத் திற்கு வருகை தருகிறபோது நாம் சந்தித்துக் கொள்ளத் தவறுவதில்லை. பாண்டிருப்பில் வேல்முருகு மாஸ் டர்ஸ் வீட்டில் — கல்முனை நகரில் நொத்தாரிஸ் கந்தையா அல்லது இராசதுரை வீட்டில் — காரைதீவில் (பெரிய) கணபதிப்பிள்ளை ஆசிரியர் வீட்டில் — அக்கரைப்பற்றில் சிவ ஞானச் செல்வக்குருக்கள் அல்லது வைத்தியர் மயில்வாகனம் (வாழையர்) அல்லது மூர்த்தி மாஸ்ரர் வீட்டில் தம்பிலுவில், திருக்கோவிலில் அறப் போர் அரியநாயகம் அல்லது சிந்தாந் துரை அல்லது கண்ணன் முதலாளி அல்லது அரசரெட்ணம் (கதிரமலை) வீட்டில் சந்திப்புகள் குறிப்பாக இளை ஞர்களுடனான சந்திப்புகள் நிகழும். மாவை சேனாதிராஜா அம்பாறை மற்றும் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும்போது அவரை அழைத்துச் சென்று தங்கவைத்து விருந்தோம்பி கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்து அவரை மீண்டும் பாதுகாப் பாக யாழ்ப்பாணம் அனுப்பி வைப்ப தில் மட்டக்களப்பில் வேணுதாஸ், நடேசானந்தம் போன்றோருடனும் நானும் அவ்வப்போது இணைந்து செயற்பட்ட காலங்கள் கனதியானவை. காலத்தால் மறக்கப்படமுடியாதவை.

அவர் மட்டுமல்ல வண்ணை ஆனந்தன் போன்றோரும் சில தடவை யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வாறு இப் பகுதிக்கு– கிழக்கிலங்கைக்கு வந்து போயுள்ளனர். ஆனாலும் கிழக்கிலங்கை மண்ணில் கூடுதலாகக் கால்பட்ட வடபகுதி அரசியல் தலைவர்களாக அமிர்தலிங்கம், தர்மலிங்கம் (சித்தார்த்த னின் தந்தை), மாவைசேனாதிராஜா ஆகியோரையே அடையாளப்படுத்த முடியும்.

கவிஞர் காசிஆனந்தனுடைய திரு மணம் 06.07.1979 இல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற் றது. சுமார் ஒருவருட காலத்தின் பின் மாவைசேனாதிராஜாவின் திருமணமும் நடந்தேறியது. திருமணம் முடித்து அம்பாறை மாவட்டத்திற்குக் காசி ஆனந்தன் மற்றும் மாவை சேனாதி ராஜா இருவரும் தமது துணைவி யர்கள் சகிதம் வருகைதந்தபோது அவர்களை அழைத்துக் கோமாரி யிலுள்ள சந்திரநேருவின் வீட்டில் மதியவிருந்து அளித்துச் சங்கை செய்து வாழ்த்தினோம். தம்பிலுவில் சிந்தாத்துரை, தர்மரெட்ணம், அரச ரெட்ணம் ஆகிய மூத்த தமிழரசுவாதி களும் அந்த நிகழ்வில்க் கலந்து கொண்டிருந்தனர்.

பின்னர் ஒருநாள் நானும் என் மனைவி சகிதம் வேறொரு அலுவலாக யாழ்ப் பாணம் மயிலிட்டியிலுள்ள உறவினர் வீடொன்றிற்குச் சென்றிருந்த போது எம்மை மாவைசேனாதிராஜா தனது மாவிட்டபுர வீட்டிற்கு அழைத்து இராப்போசனமளித்து விருந்தோம்பி னார். உணவருந்தியபின் அவரது வீட்டு முற்றத்தில் அவரும் அவரது துணைவியாரும் நானும் என் மனைவியும் அவர்கள் அளித்த இனிப்பான திராட்சைப்பழங்களைச் சுவைத்த வண்ணம் நீண்ட நேரம் கதைத்திருந்து விட்டு அவரது வீட்டை விட்டு அகல நடுநிசியாகி விட்டது. அந்த அளவுக்கு நாம் அன்னியோன்யமாக இருந்தோம்.





காலங்கள் ஓடி 1994 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் வந்தது. இந்தத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் (திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்) என்ன நடந்தது என்பதை இங்கு பதிவு செய்வது பொருத்தம் என எண்ணுகின்றேன்.


1994 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது, 1989 தேர்தலில் முதன் முறையாக அறிமுகமான விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் தமிழ்க்கட்சி கள் ஒரு குடையின் கீழ் போட்டி யிட்டால் தான் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பி னரைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆகவே அப்போது நான் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் செயற்பாட்டாளராக (மாவட்ட இணை ப்பாளராக) இருந்தேன். தமிழ்க் கட்சி களை ஐக்கியப்படுத்தி ஒரு குடையின் கீழ் அவர்களைப் போட்டியிட வைக்க நாங்கள் முயற்சித்தோம். அதற்காகக் கொழும்பிற்குத் தமிழர் மகா சங்கத்தின் தூதுக்குழுவொன்று வந்து அனைத் துத் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தியது. அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் நாங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் தமிழர் விடுதலை கூட்டணி மட்டும் அக்கோரிக்கையை ஏற்காமல் தனித்துப் போட்டியிடக் கங்கணம் கட்டிக்கொண்டு நின்றது. அப்போது அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் சார்பான பேச்சுவார்த்தைக் குழுவுக்கு நான் தலைமை தாங்கி னேன். தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான பேச்சுவார்த்தைக் குழுவுக்கு அமரர். மு. சிவசிதம்பரம் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார். காரசார மான விவாதங்கள் கருத்து மோதல்கள் இடம் பெற்றன. எங்களது கோரிக் கையை ஏனைய தமிழ்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டு ஒரே சின்னத்தின் கீழ் (உதயசூரியன்) போட்டியிட முன்வந்த போதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் மறுத்துத் தனித் துப் போட்டியிட நின்றது. அப்போது எங்களுடைய அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் குழு கூட்டணியிடம் ஒரு நியாயமான கோரிக்கையை விடுத்தது. அது என்னவென்றால், அப்படித் தனித்துக் கூட்டணி போட்டியிட்டால் தமிழர் மகா சங்கம் கூட்டணியை ஆதரிக்கும் என்றும் தேர்தலில் ஏனைய தமிழ்க் கட்சிகளும் போட்டியிடும். அந்தச் சந்தர்ப்பத்தில் தற்செயலாக வாக்குகள் பிரிந்து அம்பாறை மாவட்டத் தமிழர் பிரதிநிதித்துவம் கிடைக்காத பட்சத் தில் கூட்டணிக்குக் கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்த போது அதற்கும் அவர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். அப்படி யானால் அங்கு யாரைத் தலைமை வேட்பாளராக நிறுத்துவீர்கள் என்று நாங்கள் கேட்டபோது மாவைசேனாதி ராஜாவை நிறுத்தத் தீர்மானித்திருக் கின் றோம் என்று சொன்னார்கள்.

அதற்கு நாங்கள் ஏன் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தகுதிவாய்ந்த ஒருவர் கிடைக்கவில்லையா என்று கேட்டு அதைத் தவிர்க்குமாறு கேட் டோம். அதற்கும் அவர்கள் மறுத்து விட்டார்கள். இவ்வாறுத ான் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு நியாய மற்ற செயற்பாட்டில் ஈடுபட்டது. எனவே (25ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா கஷ்டங்களும் நீங்கி மனதில் நிம்மதி உண்டாகும். முயற்சிகள் சாதகமானபலன் பெறும். வாகனங்களில் செல்லும் போதும், இயந்திரங்களை கையாளும் போதும் தீ, மின்சாரம் ஆகியவற்றிலும் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. வீட்டில் சுபகாரியங்கள் நடக்கலாம். திருமண முயற்சிகள் கைகூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். வியாபாரம், தொழிலில் ஏற்பட்ட தொய்வு நீங்கும்.





ரிஷபராசி அன்பர்களே! திருமணம் தொடர்பான முயற்சிகள் கைகூடும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். பண வரத்து அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி நீங்கும். இனிமையான பேச்சின் மூலம் எல்லாவற்றையும் நல்ல முறையில் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த பிரச்னைகள் தீர்ந்து நல்லநிலை உண்டாகும்.





மிதுனராசி அன்பர்களே! எதிலும் முன் யோசனையுடன் செயல்படுவது நல்லது. வீண் விவாதங்களால் அடுத்தவர்களுடன் தகராறு உண்டாகலாம். எனவே கவனமாக பேசுவது நல்லது. முயற்சிகளில் தடை உண்டாகலாம். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்னைகள் தீரும். முக்கிய நபர்களின் நட்பு உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.




கடகராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை பெறுவீர்கள். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைபட்ட பண வரத்து தடை நீங்கி கைக்கு வந்து சேரும்.





சிம்மராசி அன்பர்களே! எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அவசர முடிவுகளை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. விரும்பதகாத ஆசைகள் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வெளிநாடு செல்வதில் எதிர்பாராத சிக்கல் ஏற்படலாம். கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்கள் உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். குடும்பத்தினரால் நன்மை உண்டாகும். பொருள் சேர்க்கை உண்டாகும். தடைபட்ட பணம் கைக்கு வந்து சேரும். மரியாதையும், அந்தஸ்தும் உயரும். தந்தை மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். காரிய வெற்றி உண்டாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். தொழில் வியாபார போட்டிகள் நீங்கும்.




துலாம்ராசி அன்பர்களே! உங்கள் மனதை வாட்டி வந்த சிக்கல்கள் தீரும். வெளிநாட்டு பயணங்கள் செல்ல நேரிடலாம். பண விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. புதிய வீடு கட்டும் பணி அல்லது பழைய வீட்டை புதுப்பிக்கும் பணிகள் நடைபெறும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். வழக்குகளில் சாதகமான பலன் காணப்படும். நீண்ட நாட்களாக இருந்த நோய் நீங்கும். தொழில் வியாபார போட்டிகள் விலகும். மற்றவர்களால் ஏற்பட்ட பழிசொல் நீங்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாகனம், வீடு மூலம் செலவுகள் அவ்வப்போது ஏற்படலாம். எதையும் செய்யும் முன் தயக்கம் உண்டாகலாம். குடும்பத்தில் திருமண வயதில் இருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். பிள்ளைகள் உடல் நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! மன துணிவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். புத்திரர்களுக்கு நன்மை உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்னை குறையும். புத்தி சாதுரியம் அதிகரிக்கும். காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். எதிலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் ஏற்படும். திடீர் செலவுகள் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! எல்லா தொல்லையும் நீங்கி நன்மை ஏற்படும்.ஆன்மீக பயணம் செல்ல நேரிடும். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் தேவையற்ற வாக்குவாதம் உண்டாகலாம். வாகனங்களால் செலவும் ஏற்படும். உடல் ஆரோக்யம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த லாபம் குறையும்.




கும்பராசி அன்பர்களே! ஓயாத வேலையும் அலைச்சலும் இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் மனவருத்தம் ஏற்படும் விதத்தில் ஏதாவது சம்பவங்கள் நடக்கலாம். உறவினர் நண்பர்கள் உங்களை சரிவர புரிந்து கொள்ளாமல் உங்களை விட்டு பிரிந்து செல்லக்கூடும். திடீர் மனக்கவலை ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும்.




மீனராசி அன்பர்களே! பொருள் சேர்க்கையும் உடல் ஆரோக்கியமும் உண்டாகும். கடன் பிரச்சனைகள் தொல்லை தராமல் கட்டுக்குள் இருக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வாக்கு வன்மை அதிகரிக்கும். உடன் பிறப்புகளிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நீடிக்கும். மனதுக்கு பிடித்தபடி பொழுதை கழிப்பீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# யூ.எஸ்.எயிட் உதவி இடை நிறுத்தமும் இலங்கையின் இரு ட்ரம்ப் விசிறிகளும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) நிறுவனமாக யூ .எஸ். எயிட் விளங்கி வந்திருக்கும் நிலையில், நிதியுதவி இடைநிறுத்தம் பல தொண்டர் நிறுவனங்கள் அவற்றின் ஊழியர்களின் எண்ணிக்கையில் குறைப்புச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது மாத்திரமல்ல, சில தொண்டர் நிறுவனங்கள் ஏற்கெனவே மூடப்பட்டும் விட்டன என்றும் ஜெகான் பெரேரா கூறியிருக்கிறார்.

முன்னைய அரசாங்கங்களில் முக்கிய பொறுப்புக்களை வகித்த அரசியல்வாதிகள் ஊழல் முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களே மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக யுஎஸ்.எயிட் உதவி நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் எதிராக பிரசாரங்களை முன்னெடுத்திருக்கிறார்கள்.

தங்களது வீழ்ச்சிக்கு தவறான ஆட்சி முறையும் ஊழல் முறைகேடுகளுமே உண்மையில் காரணம் என்பதை இந்த அரசியல்வாதிகள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. யூ .எஸ். எயிட்டின் நிதியுதவியைப் பெற்று வந்த அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் சதி வேலைகள் காரணமாகவே தாங்கள் இடைநடுவில் அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்டதாக இவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள் என்றும் ஜெகான் பெரேரா எழுதியிருக்கிறார்.

யூ .எஸ். எயிட் உதவி திடீரென்று இடை நிறுத்தப்பட்டதனால் இலங்கை உதவிகளைப் பெறுவதற்கு 'மாற்று வழிகளை நாட வேண்டியிருக்கும்' என்று அரசாங்க பேச்சாளரான சுகாதார, தகவல்துறை அமைச்சர் நாளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருக்கிறார். யூ .எஸ். எயிட் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அந்த நிறுவனம் இலங்கைக்கு 200 கோடி டொலர்களை (சுமார் 72 ஆயிரம் கோடி ரூபா) உதவியாக வழங்கியிருக்கிறது என்று கூறப்படுகிறது.

கெடுபிடியுத்தம் (Cold War) உச்சக் கட்டத்தில் இருந்த காலப்பகுதியில் உலக நாடுகளில் சோவியத் யூனியனின் செல்வாக்கை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் முக்கியமான ஒரு அங்கமான வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைப்பதற்காக ஜனநாயக கட்சி ஜனாதிபதியான ஜோன் எவ். கென்னடியினால் 1961 ஆம் ஆண்டில் யூ .எஸ். எயிட் நிறுவனம் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்கு "கோல்ட் கார்ட்" விலை 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள்!

(3ம் பக்கத் தொடர்ச்சி) நிறைய வரி செலுத்துவார்கள். நிறைய பேரை வேலைக்கு அமர்த்துவார்கள்" இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்தார். மேலும் இந்த திட்டம் இரண்டு வாரங்களில் நடைமுறைக்கு வரும் என்றும் இதற்கு காங்கிரஸின் ஒப்புதலை பெற வேண்டிய அவசியம் தனது நிர்வாகத்துக்கு இல்லை என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால் இந்த திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பது குறித்த தெளிவான தகவல்கள் எதையும் அவர் வெளியிடவில்லை.

அமெரிக்காவில் குடியேறும் முதலீட்டாளர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து கிரீன் கார்டுகளைப் பெற அனுமதிக்கும் திட்டத்துக்கு இது மாற்றாக இருக்கும் என்று அமெரிக்க வர்த்தகத் துறை செயலாளர் ஹோவர்ட் லுட்னிக் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் சுற்றுலா விருத்தியில்

(19ம் பக்கத் தொடர்ச்சி) நடத்திக் கொண்டிருக்கின்றனர். அதை மாற்றிச் சுற்றுலாத்துறை அமைச்சிடம் வழங்க வேண்டும். அத்துடன் இந்த டீநயஉா க்குச் செல்லக் கூடிய போக்குவரத்துப் பாதையைச் சீராக்கி, போக்குவரத்தையும் குறைவான செலவில் உருவாக்கலாம். இந்த Beach க்கு அண்மித்ததாக மண்ணித்தலையில் சோழர் காலச் சிவன் கோயில் ஒன்றுள்ளது. அதனுடைய சிதைவுகளே எஞ்சியுள்ளன. ஆனால், சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த மாதிரி வரலாற்று எச்சங்கள் தான் ஈர்ப்புக்குரியவை. அங்கிருந்து 15 நிமிடத்தில் யாழ்ப்பாணத்துக்குப் படகில் செல்ல முடியும். அதற்கான இறங்குதுறை ஒன்றை அமைத்தால், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலகுவாக இந்த டீநயஉா இல் நிறைவர்.

இதைப்போல இயக்கச்சி சுண்டிக்குளம் ஆனையிறவுக் கடனீரேரியோடிருக்கும் Nature Park கும் பறவைகள் சரணாலயமும் (Bird sanctuary) சற்று விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். சரணாலயத்தை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதைப் பறவைகளே விரிவாக்க வேண்டும். ஆனால், அந்தச் சூழலை நாம் பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியம். அதைப் பார்க்கச் செல்லும் வழிகளைப் புனரமைப்புச் செய்ய வேண்டும். அங்கே 136 பறவை இனங்கள் உண்டு. 187 தாவரங்கள் இருப்பதாக ஆய்வு செய்திருக்கிறார்கள். ஒரு பக்கம் பறவைகள் தங்குவதற்கான வில்லுகளும் (குளங்களும்) நீண்ட வெளியும் உண்டு. ஓரம் நீளத்துக்கும் களப்புக் கடலும் கண்டற்காடுகளும். மறுபக்கத்தில் அலைமோதிக் கொண்டிருக்கும் இந்து சமுத்திரம்.

நமது பிரதேசத்துக்கு சுற்றுலாப் பயணிகள் வர வேண்டுமாக இருந்தால், அதற்குரிய சிறப்பம்சங்கள் அங்கங்கே இருக்க வேண்டும். அல்லது அவற்றை உருவாக்க வேண்டும். கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள தாமரைத் தடாகம் என்ற வணிகக் கட்டிடம் இவ்வாறு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அதைப் போல எல்லா இடங்களிலும் கட்ட முடியாது. அதற்கு மக்களிடமுள்ள தாங்குதிறன் இடமளிக்காது. ஆனால், வெவ்வேறு பிராந்தியங்களில் அந்தந்தப் பிராந்தியங்களின் வளங்கள், வாய்ப்புகளுக்கு ஏற்ற மாதிரி ஒவ்வொன்றையும் உருவாக்கலாம். அது அந்தந்தப் பிராந்தியங்களின் அடையாளங்களைக் கொண்டிருந்தால் சிறப்பு.

யுத்தம் முடிந்த பிறகு, மிக அதிகமானோர் வடக்கு நோக்கி வந்தனர். நீண்ட காலமாக யுத்தம் நடந்த ஒரு பிரதேசத்தை, யுத்தத்தினால் அழிந்த பகுதிகளை, யுத்த காலத்தில் முழுதாகவே மூடப்பட்டுத் தடை செய்யப்பட்ட, இருண்டிருந்த ஒரு பிராந்தியத்தைப் பார்ப்பதற்கு விரும்பினார்கள். யுத்தத்தின் எச்சங்களையும் வடுக்களையும் கண்டு திரும்பினார்கள். இது யுத்தம் முடிந்த பிறகான சூழல். இனியொரு புதிய யுகத்தைக் காண்பதற் கான காலம். அதற்கான அக புற விழிகளை நிறைக்கும் வகையில் இன்றைய நாளைய சுற்றுலா அமைய வேண்டும். சுற்றுலா மட்டுமல்ல, இன்றைய நாளை நாட்களும் சூழலும் அமைவது அவசியம். அதற்கான வாசல்கள் திறக்கப்படட்டும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# வடக்கு கிழக்கில் பணி புரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு "தீவிரவாதி" முத்திரை குத்தப்படுவதாக ஐ.நா. மனிதஉரிமையாளர் அறிக்கை

இலங்கையில் மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணி புரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தொடர் வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக்கு உள்ளாவதாகவும், தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படுவதாகவும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலரின் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத் தொடர் கடந்த 24 பெப் 2025 திங்கட் கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத் தொடரின் இரண்டாம் நாள் அமர்வில் 25 பெப் 2025 செவ்வாய்கிழமை இலங்கை சார்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும் எனவும், நாட்டில் இடம் பெற்ற வன்முறைகள் குறித்து விசாரிப்பதற்கான ஆணை அக்கட்டமைப்புக்கு வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் இலங்கை தொடர்பான வாய்மொழி மூல அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

அதே போன்று உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டு வரும் ஒடுக்குமுறைகள் மற்றும் மீறல்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலரின் அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



அதன்படி இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நிலை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மேரி லோலர், மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணி புரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தொடர் வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக்கு உள்ளாவதாகவும், தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அது மாத்திரமன்றி பல பெண் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள அவர் அவர்கள் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்கும் போது தாக்குதலுக்கு உள்ளாவதாகவும், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவதாகவும் விசனம் வெளியிட்டுள்ளார்.

# அரசியல்வாதிகள் தினமும் விசாரணைக்கு அழைக்கப்படுவார்கள்

அரசியல்வாதிகளை விசாரிப்பதில் எந்த அரசியல் பழிவாங்கலும் இல்லை என்று கூறிய பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, எதிர்காலத்தில் சட்ட அமலாக்க அதிகாரிகளின் விசாரணைகளின்படி தினமும் பல அரசியல்வாதிகள் அழைக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும், பொலிஸாருக்கும், ஐஜிபிக்கும் விசாரணைகளை மேற்கொள்ள முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் கூறினார். விசாரணைகளின் ஒரு பகுதியாக அவர்கள் அழைக்கப்படுகிறார்கள் என்று அவர் கூறினார்.

சிஐடியால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விசாரிக்கப்படுவதற்குப் பின்னால் அரசியல் பழிவாங்கல் உள்ளதா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், அரசியல்வாதிகள் விசாரிக்கப்படுவதற்குப் பின்னால் எந்த அரசியல்



பழிவாங்கலும் இல்லை என்றும், சட்ட அமலாக்க அதிகாரிகள் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய விரும்பினால் நாமலோ அல்லது வேறு யாரை வேண்டுமானாலும் அழைப்பார்கள் என்றும் கூறினார்.

இதேவேளை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை மீண்டும் விசாரணைக்கு அழைத்து வருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைக்குப் பிந்தைய ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு அழைத்து வருவதில் அதிகாரிகள் சில சட்ட சிக்கல்களை எதிர்கொள்வதாகக் கூறினார். அவரை இலங்கைக்கு நாடு கடத்த அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகக் கூறிய அமைச்சர் ஜெயதிஸ்ஸ, அவர் முன்னிலையில் அல்லது இல்லாத நிலையிலும் கூட அவருக்கு எதிரான வழக்கு தொடரும் என்று உறுதியளித்தார்.

சிங்கப்பூரில் ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதாகக் கூறி அர்ஜுன மகேந் திரன் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் பாராளுமன்றத்தில் கூறியதாகக் கூறிய அமைச்சர், மகேந்திரன் திரும்பி வருவதை உறுதி செய்வது முன்னாள் ஜனாதிபதியின் கடமை என்றும் கூறினார்.



# மாவையும் அம்பாறையும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து என்னுடைய தலைமையில் சுயேச்சைக் குழு அமைத்துப் போட்டியிட்டது. இதன் விளைவு 1994இல் அம்பாறை மாவட்டத்தில் தமிழருக்கான ஒரேயொரு பிரதிநிதித்துவமும் இல்லாமல் போனது. இதற்குக் காரணம் தமிழர் விடுதலைக்கூட்டணியே. அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்காமல் மாவை சேனாதிராஜாவின் தனிநபர் நலன் முதன்மைப் படுத்தப்பட்டதே இதற்குக் காரணம்.

அடுத்ததாக 2000ஆம் ஆண்டுத் தேர்தலின் போதும் முன்னைய அனுபவத்தை வைத்துக் கொண்டு அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் ஈடுபட்டது. அப்போது கூட ஏனைய கட்சிகள் ஒரு குடையின் கீழ் அணி திரள ஒன்றிணைந்த போதும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றிணைய முன்வரவில்லை.

எனது தலைமையின் கீழ் பேச்சுவார்த்தை இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துப் போட்டியிட வேட்பு மனு வைத் தாக்கல் செய்தது. இதனால் பேச்சுவார்த்தைகளில் ஒன்றாக இணைந்து செயற்பட முன் வந்த கட்சிகள் தனித்தனியே போட்டியிட முயற்சித்தன. எங்களுடைய முயற்சி பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடியும் என்ற காரணத்தால் பல கட்சிகள் ஆத்திரமுற்று தனித்தனியே போட்டியிடுவதைத் தவிர்த்து ஒன்றாக ஒரு குடையின் கீழ் போட்டியிடுவதற்காகத் தமிழர் மகா சங்கம் ஏனைய கட்சிகளை இணைத்து சுயேச்சைக் குழுவை உருவாக்கியது. அதற்கும் நான் தான் தலைமை தாங்கினேன்.

கூட்டணியின் தேர்தல் வேட்புமனுவில் ஒரு பிழை இருந்ததால் அந்த மனுவை எதிர்த்து நாங்கள் வழக்குத் தாக்கல் செய்தபடியால் 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் மனு நிராகரிக்கப்பட்டது. இதனால் தமிழர்கள் சார்பில் தமிழர் மகா சங்கத்தால் நியமிக்கப்பட்ட சுயேச்சைக் குழுவே போட்டியிட்டு ஒரு ஆசனத்தைப் பெற்றுக் கொண்டது. அதில் ஈபிடிபி சார்பில் போட்டியிட்ட மா. குணசேகரம் (சங்கர்) அவர்கள் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவானார். அந்தத் தேர்தலில் கூட்டணியானது. அம்பாறை மாவட்ட தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை முன்னைய 1994 பொதுத் தேர்தலில் நடந்தது போலப் பறிபோய் விடாமல் காப்பாற்றுவதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக் குழுவுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்கும்படி அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குத் திரை மறைவில் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதற்கு ஆதாரமாக அமரர். ந.ரவிராஜ் தன்னுடைய பெயரில் யு.என்.பி சார்பில் போட்டியிட்ட நிந்தவுரைச் சேர்ந்த அப்பாஸ் என்கின்ற சட்டத்தரணிக்கு ஆதரவு அளிக்கும்படி வீரகேசரியில் விளம்பரம் கொடுத்திருந்தார். அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக்காரர்களிடம் மாவைசேனாதிராஜா அத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி அறிவுறுத்தியிருந்தார். இப்படியாகத் தான் தமிழர் தாயகம் என்றும் தமிழ் தேசியம் என்றும் பேசிக்கொண்டு அதற்கு முரணாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி நடந்து கொண்டது.

இதே போன்று தான் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 1994 பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வன்னியைப் பிறந்த மண்ணாகக் கொண்ட முன்பு வவுனியா நகரசபைத் தலைவராக இருந்த திரு.கேதீஸ்வரன் அவர்களுக்கு வேட்பாளர் நியமனம் வழங்காது மு.சிவசிதம்பரம், வீ.ஆனந்தசங்கரி ஆகியோருக்கு நியமனம் வழங்கி நியாயமற்ற முறையில் தமிழர் விடுதலைக்கூட்டணி நடந்து கொண்டது. வன்னிமக்களின் நலன்களை விட தனிநபர்களான தா.சிவசிதம்பரம், வீ.ஆனந்தசங்கரி ஆகியோரின் நலன்கள் முதன்மைப்படுத்தப் பட்டன. மக்கள் நல நாட்டமில்லாத யாழ் மேலாதிக்க மனப்பான்மை கொண்ட இவர்களுடன் எனக்கு அன்றிலிருந்து உடன்பாடு இல்லாமல் போய்விட்டது. அதற்கு முன்னரே 1987 இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் தமிழர் விடுதலைக் கூட்டணி முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை (தனிப்பட்ட ரீதியில் அமிர்தலிங்கத்தைத் தவிர) என்ற அதிருப்தியும். தமிழர் விடுதலைக்கூட்டணி மீது எனக்கு ஏற்பட்டிருந்தது.



1994இல் யாழ்மாவட்டத்தில் சூழ்நிலை நன்றாக இல்லையென்று காரணம்கூறி தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்டத்திலே போட்டியிடுவதைத் தவிர்த்திருந்தது. அதனால் மாவை சேனாதிராசா, தா. சிவசிதம்பரம், ஆனந்தசங்கரி ஆகியோர் இடம் தேடி வெளி மாவட்டங்களுக்குப் படையெடுத்திருந்தார்கள்.

காலங்கள் ஓடி, பின்னர் 2001 இல் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உருவாகி அதற்குள் நடந்த பிரச்சினைகளால் தமிழர் விடுதலைக்கூட்டணியையும் அதன் உதயசூரியன் 'சின்னத்தையும் ஆனந்தசங்கரி தட்டிக் கொண்டு போனபின் 2004 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவதற்காக. 1972இல் தமிழர் கூட்டணியாக உருவாகி 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழ்விடுதலைக்கூட்டணியாகப் பெயர்மாற்றம் பெற்ற காலத்திலிருந்தே சுமார் முப்பது தசாப்தங்களுக்கும் மேலாகப் பெயரளவிலேயே உறங்கு நிலையிலிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி தூசிதட்டி எடுக்கப்பட்டு ஒரு கட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இரா. சம்பந்தனும் செயலாளராக மாவை சேனாதி ராசாவும் ஆனார்கள்.

இரா. சம்பந்தன் அவர்கள் தனது அரசியல் வாழ்நாள் முழுவதும் 'பல் கனி' அரசியல் தான் செய்தவர். அவருக்குத் தமிழரசுக்கட்சியின் மாவட்டப் பிரதிநிதிகளுடனோ அல்லது தமிழரசுக் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களுடனோ உறவோ ஊடாட்டமோ பரிச்சயமோ குறைந்த பட்சம் அறிமுகமோ இருக்கவில்லை. ஆனால், மாவை சேனாதிராஜாவுக்கு இவை இருந்தன. இது தான் மாவை சேனாதிராசாவின் பிளஸ் பொயின்ட்அரசியல் தேவைகளுக்காகத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவோ அல்லது பொதுச்சபையோ கூட வேண்டுமென்றால் மாவை சேனாதிராஜா தனக்குத் தெரிந்த தனக்கு விருப்பமான யார் யாரையெல்லாம் அழைக்கிறாரோ அவர்கள் தான் மத்திய செயற்குழு உறுப்பினர்களாகவும் பொதுச்சபை உறுப்பினர்களாகவும் கருதப்பட்டனர். 2014 வரைக்கும் சுமார் பத்து வருடங்கள் தமிழரசுக் கட்சி இப்படித் தான் ஓடியது. 1972 க்குப் பின்னர் உறங்கு நிலைக்குச் சென்ற தமிழரசுக்கட்சி நீண்டகாலத்திற் குப் பின்னர் அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவானதன் பின்பு மட்டக்களப்பில் கூட்டிய பொதுச்சபைக் கூட்டத்திற்கு மூத்த தமிழரசுவாதிகள் பலர் அழைக்கப்படவில்லை. கேள்விப்பட்டுப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த அவ்வாறானவர்கள் 'அழைப்பில்லை' என்று கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் துரைராசசிங்கத்தைத் தவிர மற்ற அனைத்து முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் தேர்தல் தேவைகளுக்காகத் தமிழரசுக்கட்சிக்குள் நுழைந்தவர்களே தவிர தமிழ்த்தேசியத்தின்பால் விசுவாசமான ஈர்ப்புக் கொண்டவர்களல்ல.

தேவையான போது தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கும் பொதுச்சபையைக் கூட்டுவதற்கும் இளைஞர்களைக் கட்சிபோடு வைத்துக் கொள்வதற்கும் இரா. சம்பந்தன் மாவை சேனாதி ராசாவைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டாரேதவிர மாவை சேனாதிராசாவின் ஆளுமைப் பலவீனங்களைச் சம்பந்தர் சரியாகவே மதிப்பீடு செய்து வைத்திருந்தார்.

மாவை சேனாதிராஜாவிடம் அரசியல் மூப்பு இருந்ததேதவிர அறிவார்ந்த அரசியல் (ஞானம்) அனுபவமிருக்கவில்லை. போராட்டப் பின்னணி — அர்ப்பணிப்பு — தியாகம் — சிறைவாசம் என்ற பின்னணிகளை மாவை சேனாதிராஜா கொண்டிருந்த போதிலும், அழகு குணசீலன் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளவாறு 'மாவை அவரின் உருவத்திற்கும் உயரத்திற்கும் ஏற்ற உறுதியான ஆளுமையோ, தலைமைத்துவப் பண்புகளையோ கொண்ட கட்சியின் கட்டளைத்தளபதி அல்ல'. இவரது இந்தப் பலவீனம்தான் சுமந்திரனைப் போன்ற ஒருவரைத் தேடவேண்டிய தேவையை இரா. சம்பந்தனுக்கு ஏற்படுத்தியது. தமிழ்த் தேசிய அரசியலில் அதுவரை பெயரைத் தானும் கேள்விப்பட்டிராத சுமந்திரனை 2010ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் (தமிழரசுக் கட்சிக்கு) கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்திற்குத் தன்னிச்சையாகப் நியமிப்பதற்கான சந்தர்ப்பத்தைச் சம்பந்தருக்கு வழங்கியது.

சம்பந்தர் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவதைத் தவிர மாவை சேனாதிராஜாவுக்கு வேறு எதுவும் தெரியவில்லை. இந்தக் கட்டத்திலேயே 2014 ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாட்டில் வைத்து சம்பந்தர் தந்திரமாகத் தனது தலைப் பாரத்தை இறக்கி மாவை சேனாதிராஜாவின் தலையில் கட்டி விட்டுத் தனக்குத் தலையாட்டும் இன்னொரு 'பச்சைத் தண்ணி'யான மட்டக்களப்பைச் சேர்ந்த துரைராசசிங்கத்தைக் கட்சியின் செயலாளராக்கினார். தமிழரசுக் கட்சியின் செயலாளராகவும் பின்னர் தலைவராகவும் விளங்கிய மாவை சேனாதிராஜாவின் ஆளுமைப் பலவீனம் காரணமாகத் தமிழ்த்தேசிய அரசியலுக்குச் சரியான தலைமைத்துவத்தை வழங்க முடியவில்லை. அதேபோன்றே ஆளுமைப் பலவீனத்தைக் கொண்ட துரைராசசிங்கத்தினால் அவர் ஒரு சட்டத்தரணியாகவும் நீண்ட காலத் தமிழரசுக்கட்சி உறுப்பினராகவும் இருந்த போதிலும் அமிர்தலிங்கம் போன்றதொரு காத்திரமான வகிபாகத்தை வகிக்க முடியவில்லை.

இவர்களின் ஆளுமைப் பலவீனங்களுடன் சேர்ந்து சம்பந்தரின் மூப்பு ஓர் ஊக்கியாக அமைய அந்த இடைவெளிக்குள் புகுந்து சுமந்திரன் தனது 'தலைப் பாகை'யைச் சிக்காராகக் கட்டிக் கொண்டார். அண்மைக் காலங்களில் தமிழரசுக்கட்சி மேற்கொண்ட தவறான அரசியல் தீர்மானங்களுக்கும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்சிக்குள் ஏற்பட்ட குளறுபடிகள் குத்துவெட்டுகளுக்கும் இதுவே அடிப்படைக் காரணம். இன்றிருப்பது சுமந்திரனின் கட்டுப்பாட்டிலுள்ள பதில் தலைவராகச் சிவஞானத்தையும் பதில் செயலாளராக வைத்தியகலாநிதி சத்தியலிங்கத்தையும் கொண்ட 'பதில்' தமிழரசுக்கட்சியே தவிர அதன் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகத்தால் நிறுவப் பெற்று வன்னியசிங்கம் ஈ.எம்.வி நாகநாதன் எஸ்.எம். இராசமாணிக்கம் அமிர்தலிங்கம் கதிரவேற்பிள்ளை போன்ற அர்ப்பணிப்பும் அறிவார்ந்த சிந்தனையும் அரசியல் ஞானமும் நிரம்பப் பெற்ற ஆளுமைமிக்க அரசியல் தலைவர்களால் வழிநடாத்தப் பெற்ற ஒரிஜனல் தமிழரசுக்கட்சி அல்ல. (இறுதியாகக் கிடைத்த தகவலின்படி சத்தியலிங்கம் தனது பதில் செயலாளர் பதவியை இராஜினமாச் செய்து அவ் விடத்திற்குச் சுமந்திரன் நியமனம் பெற்றுள்ளார்.)

சரி பிழைகளுக்கப்பால் தமிழரசுக்கட்சி மீது வைக்கப்படக்கூடிய விமர்சனங்களுக்கும் அப்பால் தமிழரசுக்கட்சி மீது இனி மேலும் வைக்கப்படக் கூடிய நம்பிக்கைகளுக்கும் நம்பிக்கையீனங்களுக்கும் அப்பால் தமிழரசுக் கட்சியின் சகாப்தம் மாவை சேனாதி ராஜாவின் மரணத்துடன் முற்றுப் பெற்று விட்டது. இனித்தமிழ் மக்களின் தேவை தமிழர் அரசியலிலும் ஒரு முறைமை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு (புதிய) மாற்று அரசியல் அணியேயாகும். அதற்கான இடைவெளியை மாவையின் மரணம் ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களிடையேயுள்ள கல்விமான்களும் புத்திஜீவிகளும் துறைசார்நிபுணர்களும் அரசியலாளர்களும் எழுத்தாளர் கலைஞர் ஊடகவியலாளர்களும் தொழில்முனைவோர்களும் என அனைத்து மக்களும் இந்த 'மாற்று அரசியல் அணி' குறித்துச் சிந்திக்கத் தலைப்படுவார்களாக.